




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

ISSN: 2582–5518








வியாழன் ❖ ஜனவரி. 04, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 91 ❖ ரூ.10


### அமமுகவுடன் இணைந்து மக்களவைத் தேர்தலை சந்திப்போம்

# கணக்கு

## மூன்றாவது முறையாக நரேந்திர மோடி நாட்டின் பிரதமராக வருவார்: முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்

சென்னை , ஜன. 4–

" பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்தபோது அரசியல் எதுவும் பேசவில்லை. மக்களவைத் தேர்தல் என்பது இந்திய பிரதமரை தேர்வு செய்கிற தேர்தல். அந்தத் தேர்தலில் பாஜக தலைமையிலான கூட்டணிதான் நிச்சயமாக வெற்றி பெறும். மூன்றாவது முறையாக நரேந்திர மோடி நாட்டின் பிரதமராக வருவார்" என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும், அமமுகவுடன் இணைந்து மக்களவைத் தேர்தலை சந்திப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



சென்னையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "நான் கட்சியில் இருந்தபோது, அநியாயமாக நடந்த பொதுக்குழுவிலும், கட்சியினுடைய வரவு செலவு கணக்குகளை என்னைவாசிக்கவிடாமல் அந்தக்கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டனர். அதிமுக பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்றதில் இருந்து, கட்சியின் பொருளாளராக சீனிவாசன் பொறுப்பேற்றதில் இருந்து அதிமுகவின் வரவு செலவு கணக்கு விவரங்களை நாங்கள் நீதிமன்றத்தின் வாயிலாக கேட்கப்போகிறோம். அதற்கு அவர்கள் உரிய பதிலளிக்க வேண்டும்" என்றார்.

தமிழக அரசின் பொங்கல்பரிசுத்தொகுப்பு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "அரசு அறிவித்துள்ள பரிசுத் தொகுப்பு போதாது என்று ஏற்கெனவே நான் அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். பொங்கல் பரிசுத் தொகுப்புடன் மக்களுக்கு ரூ.3,000 வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறேன். அரசின் அறிவிப்பு மக்களுக்குநிறைவானதாக இல்லை. ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பை மக்கள் மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றனர்" என்றார்.

பிரதமர் மோடி உடனான சந்திப்பு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "திருச்சி வந்த பிரதமரை சந்திப்பதற்கு வாய்ப்புக்கேட்டிருந்தேன். பிரதமரை வரவேற்கவும், வழியனுப்பவும் அனுமதி கொடுத்தனர். மனநிறைவோடு அதை நானும் செய்தேன். இந்தச் சந்திப்பில், அரசியல் எதுவும் இல்லை. அவர் நலமுடன் இருக்க வேண்டும் என்பதற்கான வாழ்த்துக் கடிதத்தைக் கொடுத்தேன். வாய்ப்புகள் வரும்போது உறுதியாக டெல்லிக்குச் செல்வேன்.

இந்த நிமிடம் வரை பாஜகவுடன் தொடர்பில் இருக்கிறேன். மக்களவைத் தேர்தல் என்பது இந்திய பிரதமரைதேர்வு செய்கிற தேர்தல். அந்த தேர்தலில் பாஜக தலைமையிலான கூட்டணிதான் நிச்சயமாக வெற்றி பெறும். மூன்றாவது முறையாக நரேந்திர மோடி நாட்டின் பிரதமராக வருவார். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அமமுகவுடன் இணைந்து தேர்தலை சந்திப்போம்" என்று அவர் கூறினார்.

### கேலோ இந்தியா விளையாட்டு போட்டிக்கான அழைப்பிதழை வழங்குவதற்காக

## இன்று பிரதமர் மோடியை சந்திக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை : ஜன. 4,

சர்வதேச விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்கான தமிழ்நாட்டின் தொலைநோக்கு பார்வையை கருத்தில் கொண்டு அடுத்த கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளைதமிழகத்தில் நடத்த அனுமதிக்குமாறு கோரிக்கைவிடுத்திருந்தார். இந்தகோரிக்கையை ஏற்று நடப்பாண்டு கேலோ இந்தியா விளையாட்டு போட்டியை தமிழ்நாட்டில் நடத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் இருந்தும் வரும் இளம் விளையாட்டு வீரர்களும், தங்கள் விளையாட்டு திறன்களைவெளிப்படுத்த இந்த விளையாட்டுகள் ஒருதளமாகசெயல்படும். 44வதுசெஸ் ஒலிம்பியாட் போட்டியின் போது அனைவரும் கண்டது போல், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டின்கலாச்சாரம் மற்றும் விருந்தோம்பலை பிரதிபலிக்கும் வகையில் கம்பீரத்துடன் நடத்தப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

அதன்படி சென்னையில் ஜன.19 முதல் 31 வரை கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. இந்நிலையில் டெல்லி செல்லும் அமைச்சர் உதயநிதிஸ்டாலின்,பிரதமர் மோடியை இன்று சந்திக்க உள்ளார். தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் கேலோ இந்தியா போட்டியின் இறுதி நிகழ்ச்சியில் பங்கேற்க பிரதமருக்கு அழைப்பிதழ் வழங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## புதுக்கோட்டையில் மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாமினை கலெக்டர் மெர்சி ரம்யா துவக்கி வைத்தார்

புதுக்கோட்டை , ஜன. 4–

புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை சார்பில், 7–வது தேசிய சித்த மருத்துவ தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று துவக்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள மூலிகைகண்காட்சியினை பார்வையிட்டார்.



பின்னர் அவர்கள் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனிற்காக மருத்துவத்துறையில் பல்வேறு சிறப்பான திட்டங்களைசெயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சித்த மருத்துவத்தின் அவசியத்தை பொதுமக்களிடையே கொண்டு சேர்க்கும் வகையில், மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகை கண்காட்சி புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனையில் நடத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களை சித்த மருத்துவத்தின் மூலமாகவும் சிகிச்சை அளித்திடும்வகையில்சித்த மருத்துவத்துறைமேம்பாடு அடைந்துள்ளது.

மேலும், பழங்காலத்தில் ஏற்பட்ட நோய்களுக்கு மூலிகை சிகிச்சையின் மூலமாகவே சரிசெய்யப்பட்டு வந்தது. அதனைத்தொடர்ந்து, தற்பொழுது ஆங்கில மருத்துவ முறையிலான சிகிச்சைகள் பொதுமக்களிடையே பயன்பாட்டில் இருந்துவரும் நிலையில், சித்த மருத்துவ முறையின் மீதும் பொதுமக்களுக்கு ஆர்வம் இருந்து வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த மாபெரும் இலவச சித்த மருத்துவ முகாமினை பயன்படுத்திக்கொண்டு நோயற்ற நல்வாழ்வு வாழ வேண்டும். மேலும் இந்த மூலிகை கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டுள்ள மூலிகை தாவரங்களின் பயன்களை அறிந்துகொண்டு உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.எம்.வனஜா,இணை இயக்குநர் (சுகாதாரம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.ஸ்ரீபிரியாதேன்மொழி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (புதுக்கோட்டை) மரு.ராம்கணேஷ், வட்டாட்சியர் கவியரசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## ஜாமீன் கோரி செந்தில் பாலாஜி 3வது முறையாக மனு அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தரவு

சென்னை : ஜன. 4–

அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு குறித்து அமலாக்கத் துறை பதிலளிக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் அமலாக்கத் துறையால் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த ஜூன் மாதம் 14–ம் தேதி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் செந்தில் பாலாஜிக்கு எதிராக ஆகஸ்ட் 12–ம் தேதி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சுமார் 3 ஆயிரம் பக்கம் கொண்ட குற்றப் பத்திரிக்கையை அமலாக்கத் துறையினர் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கில் ஜாமீன் கோரி அமைச்சர் செந்தில் பாலாஜி ஏற்கனவே இரண்டு முறை தாக்கல் செய்த மனுக்களையும் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதனையடுத்து, செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுவை சென்னை உயர் நீதிமன்றமும் தள்ளுபடி செய்த நிலையில் உடல் நிலையை கருத்தில் கொண்டு ஜாமீன் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்க மறுத்த நிலையில் கீழமை நீதிமன்றத்தை நாடலாம் எனவும் அந்த மனு மீது தகுதியின் அடிப்படையில் முடிவெடுக்க வேண்டுமென உத்தரவிட்டிருந்தது.



இந்நிலையில், செந்தில் பாலாஜி சார்பில் ஜாமீன் கோரி 3வது முறையாக முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவில், "இந்த வழக்கில் ஆவணங்கள் திருத்தப் பட்டுள்ளதாகவும், அதற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளதாகவும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதி எஸ்.அல்லி முன்பு நேற்று விசாரணைக்கு வந்த போது, உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக செந்தில் பாலாஜி தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார். அமலாக்கத்துறை சார்பில் ஆஜரானவழக்கறிஞர்,இந்தமனு குறித்து பதிலளிக்க அவகாசம் அளிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். இதனையடுத்து, அமலாக்கத் துறை பதிலளிக்க அவகாசம் அளித்த நீதிபதி விசாரணையை ஜனவரி 8ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## திமுக முன்னாள் எம்எல்ஏ கு.க.செல்வம் உடல்நலக்குறைவால் காலமானார்

சென்னை : ஜன. 4–

சென்னை ஆயிரம் விளக்கு தொகுதி திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கு.க.செல்வம் உடல்நலக்குறைவால் காலமானார். கு.க.செல்வம் கடந்த சில நாட்களாக உடல்நலன் பாதிக்கப்பட்டு போரூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். தொடர்ச்சியாக அவருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தன. இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் காலமானார்.

கு.க.செல்வம், சென்னையின் இதயப் பகுதியான ஆயிரம்விளக்கு தொகுதியில் இருந்து எம்எல்ஏ ஆனவர். அதிமுகவில் இருந்த கு.க.செல்வம் 1997–ல் திமுகவில் இணைந்தார். திமுக தலைவர் ஸ்டாலின் உட்பட கட்சியின் மூத்தநிர்வாகிகளிடம்நெருங்கிப் பழகியவர். ஸ்டாலினுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த அவர், திமுக தலைமை நிலையச் செயலாளராக நியமிக்கப்பட்டார். கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் ஆயிரம்விளக்கு தொகுதியில் அதிமுக முன்னாள் அமைச்சர் ப.வளர்மதியை தோற்கடித்தார்.

திமுக எம்எல்ஏ ஜெ.அன்பழகன் மறைவால் காலியான சென்னை மேற்கு மாவட்ட திமுக செயலாளர் பதவி தனக்கு கிடைக்கும் என்று கு.க.செல்வம் எதிர்பார்த்தார். ஆனால், கடைசி நேரத்தில் திமுக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலினின் தீவிர ஆதரவாளரான சிற்றரசுவுக்கு அப்பதவி வழங்கப்பட்டது. இதனால் அதிருப்தி அடைந்த கு.க.செல்வம் டெல்லி சென்று பாஜக தலைவர்களை சந்தித்து சலசலப்பை ஏற்படுத்தினார்.



பாஜக தேசியதலைவர் ஜே.பி.நட்டாவை சந்தித்தவர், திமுகவையும் உதயநிதி ஸ்டாலினையும்விமர்சித்துபேசி வந்தார். பின்னர், திமுகவின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் அவரை நீக்கி உத்தரவிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அவர் 2020–ல் பாஜகவில் சேர்ந்து செயல்படத் தொடங்கினார். பாஜகவில் மாநில செயற்குழு உறுப்பினராக பணியாற்றி வந்தார். இருப்பினும், பாஜகவில் அவருக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று கூறி, கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மீண்டும் திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார். மீண்டும் திமுகவில் இணைந்த அவர் மீண்டும் திமுக தலைமை நிலைய அலுவலக செயலாளராக நியமிக்கபட்ட நிலையில், தற்போது உடல்நலக் குறைவால் மறைந்துள்ளார்.

## "சமூக ஊடகங்களில் யாரையும் தரக்குறைவாக விமர்சிக்காதீர்" அதிமுக ஐடி விங் நிர்வாகிகளுக்கு இபிஎஸ் அறிவுரை

சென்னை, ஜன. 4–

"சமூகவலைதளங்களில் வாயிலாக செயல்படும் அதிமுகவினர் மற்றும் அதிமுக நிர்வாகிகள், யாரையும் மரியாதை குறைவாகவோ, நாகரிகமற்ற முறையிலோ விமர்சனம் செய்யக் கூடாது. பிற கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகளைப் போல மக்களிடையே வெறுப்பை உண்டாக்கக் கூடாது" என்று அதிமுக ஐடி விங் பிரிவினருக்கு, கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார்.





மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதிமுக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் சார்பில் 'புரட்சித்தமிழரின் MASTERCLASS' நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவு மாநில நிர்வாகிகள், சென்னை, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், சேலம், ஈரோடு, கோவை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய 12 மண்டலங்களின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிர்வாகிகள், மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில்பேசிய எடப்பாடி பழனிசாமி, "விரைவில் நடைபெற உள்ளமக்களவைப்பொதுத் தேர்தலில், அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மகத்தான வெற்றிபெறும் வகையில் பிரச்சாரப் பணிகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்என்பது குறித்து விரிவாக ஆலோசனை வழங்கினார். குறிப்பாக, சமூக வலைதளங்களில் வாயிலாக செயல்படும் அதிமுகவினர் மற்றும் அதிமுக நிர்வாகிகள், யாரையும் மரியாதை குறைவாகவோ, நாகரீகமற்ற முறையிலோ விமர்சனம் செய்யக் கூடாது.

பிறகட்சிகளைச்சேர்ந்த நிர்வாகிகளைப் போல மக்களிடையேவெறுப்பை உண்டாக்கக் கூடாது. சமூக வலைதளங்களில் மரியாதை குறைவாகவும், நாகரிகமற்ற முறையில் நடந்துகொள்ளும் நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அதிமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவு என்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும். ஏதாவது பிரச்சினை என்றால், என்னை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். சமூகவலைதளங்களில் நமது தகவல் தொழில்நுட்பப்பிரிவு நிர்வாகிகளின் செயல்பாடுகளை மறைமுகமாக கண்காணிக்க7குழுக்களை அமைத்துள்ளேன். இந்தக் குழுவினர், தகவல் தொழில்நுட்பப்பிரவு நிர்வாகிகளின் செயல்பாடுகளை ரகசியமாககண்காணித்து எனக்கு அறிக்கை அளிப்பார்கள்.

எனவே, யாரையும் மரியாதைக் குறைவாக விமர்சனம் செய்ய வேண்டும். அதேநேரத்தில், 2011 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான, அதிமுக ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கி கூறுங்கள். திமுகஆட்சியில் செய்யப்பட்டுள்ள தவறுகளை ஆக்கப்பூர்வமாக மக்களிடம் கொண்டு செல்லுங்கள். பிற கட்சியினரைப் போல இல்லாமல், மரியாதையாகபதிலளிக்க வேண்டும்" என்று எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்










## அதானி வழக்கு : சிறப்புக் குழு தேவையில்லை ; 'செபி' அமைப்பே விசாரிக்கும் – உச்ச நீதிமன்றம் தீர்ப்பு




புதுடெல்லி : ஜன. 4, "அதானி குழுமத்தின் மீதான வழக்கை செபி எனப்படும் பங்குச்சந்தை ஒழுங்குமுறை ஆணையமே விசாரிக்கும்" என ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கை தொடர்பான வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேலும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில், வழக்கின் விசாரணையை செபியிடம் இருந்து மாற்ற எந்த அடிப்படையும் இல்லை என்றும், விசாரணையை சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு மாற்ற எந்த அவசியமும் இல்லை என்று தெரிவித்துள்ளது. இதேபோல்,22புகார்களில்20 புகார்களின்விசாரணையை செபி முடிந்துவிட்டது. மீதமுள்ளள இரண்டு வழக்குகளின் விசாரணையை செபி 3 மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் மற்றும் நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா மற்றும் மனோஜ்மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பு வழங்கியது. தீர்ப்பில், செபியின் ஒழுங்குமுறை சட்டத்துக்குள் ஒரு குறிப்பிட்ட அளவே உச்ச நீதிமன்றத்தால் தலையிட முடியும். அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதா என்பதை மட்டுமே உச்ச நீதிமன்றத்தால் ஆராய முடியும்.ஒழுங்குமுறையை திரும்பப்பெற செபி அமைப்புக்கு உத்தரவிட சரியான காரணங்கள் இல்லை." என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் அதானி குழுமம் பல ஆண்டுகளாக நிதி முறைகேட்டில் ஈடுபட்டு வருவதாகவும், அக்குழுமத்துக்கு மிக அதிக அளவில் கடன் இருப்பதாகவும் அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் ரிசர்ச் அறிக்கை வெளியிட்டது. பங்கு மதிப்பில் உயர்வைக் காட்டி அதானி குழும நிறுவனங்கள் மிக அதிக அளவில் கடன் பெற்றது, பங்குச் சந்தையில் முறைகேட்டில் ஈடுபட்டது, அதானி குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் போலி நிறுவனங்களைத்தொடங்கி வரி ஏய்ப்பிலும், பண மோசடியிலும் ஈடுபட்டது என்றெல்லாம் அதில் குறிப்பிடப்பட்டது. இதனால் பெரும் இழப்பை எதிர்கொண்டது அதானி குழுமம்.

இந்நிலையில், ஹிண்டன்பர்க் அறிக்கையின் உண்மைத் தன்மையை ஆராய வேண்டும் என்று கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம், செபியின் விதிமுறைகள் குறித்தும், பங்குச்சந்தைகட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆய்வு செய்ய ஓய்வுபெற்ற நீதிபதி சப்ரே தலைமையில் 6 பேர் கொண்ட குழுவை அமைத்தது. இக்குழு தனது அறிக்கையை கடந்த ஆண்டு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இந்த சூழலில் இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

## அசாம் மாநிலத்தில் பேருந்தும் லாரியும் மோதி விபத்து : 14 பேர் உயிரிழப்பு – 27 பேர் படுகாயம்



அசாம் : ஜன. 4, அசாம் மாநிலம் கொலாகாட் மாவட்டத்தில் பேருந்தும் லாரியும் மோதிய விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலிஜான் என்ற இடத்தில் நேற்று அதிகாலை நேரிட்ட விபத்தில் படுகாயமடைந்த 27 பேர் சிகிச்சைகாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். கோலாகாட்டில் உள்ள டெர்கான் அருகே உள்ள பாலிஜன் பகுதியில் அதிகாலை 5 மணியளவில் விபத்து நடந்தது. காயமடைந்த பயணிகளில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால், பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் போலீசார் மற்றும் நிர்வாக குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

கோலாகாட் மாவட்டத்தில் உள்ள டெர்கான் அருகே உள்ள பாலிஜான் கிராமத்தில் இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தின் போது, அதிகாலை 3 மணியளவில் போகிபீல் சுற்றுலாவிற்கு அட்டகேலியாவில் இருந்து புறப்பட்ட பேருந்தில் 45 பேர் இருந்தனர். இதற்கிடையில், அதிகாலை 5 மணியளவில், மார்கெரிட்டாவிலிருந்து வந்த நிலக்கரி லாரி பேருந்து மீது மோதியது. விபத்தையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த மீட்புக் குழுவினர், காயமடைந்தவர்களை ஜே எம் சி எச் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர், பல பயணிகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

பேருந்தில் இருந்த பெரும்பாலான பயணிகள் பர்லுகுவா கிராமத்தைச் சேர்ந்தவர்கள். டின்சுகியாவில் உள்ள திலங்கா கோவிலுக்கு சென்று கொண்டிருந்தனர். அங்கிருந்து போகிபீலுக்கு சுற்றுலா செல்வது வழக்கம். அப்போது இந்த விபத்து நடந்துள்ளது. கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் உயிரிழந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கப்படும் ஏன்று தெரிவித்துள்ளனர்.

## இணை நோய் உள்ளவர்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும் : அமைச்சர் மா.சுப்ரமணியன் பேட்டி



சென்னை : ஜன. 4, ஜே.என் 1 என்ற புதிய வகை கொரோனா வைரஸால் தமிழகத்தில் 30 பேர் பாதிக்கபட்டுள்ளனர் என்று அமைச்சர் அமைச்சர் மா.சுப்ரமணியன் பேட்டி அளித்துள்ளார்.

இணை நோய் உள்ளவர்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். தமிழகத்தில் பெரிய அளவிலான பாதிப்பு இல்லை. வெள்ளம் பாதித்த மாவட்டணங்களில் மழையால் ஏற்படும் காய்ச்சல்கள் எதுவும் இல்லை என்று அமைச்சர் கூறினார். முத்த குடிமக்களுக்கான தனி மருத்துவமனை இம்மாத இறுதிக்குள் திறக்கப்படும். சென்னை கிண்டியில் இம்மாத இறுதிக்குள் முத்த குடிமக்களுக்கான தனி மருத்துவமனை திறக்கப்படும். வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், இணை நோய் உள்ளவர்கள் பொது இடங்களில் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். புதிய கொரோனாவால் பாதிக்கப்படுபவர்கள் 4 நாட்களிலேயே குணமாகிவிடுகின்றனர். தமிழ்நாட்டில் பெரிய அளவிலான பாதிப்பு இல்லை. யாரும் பதற்றம் அடைய வேண்டாம் என்று கூறினார்.

## தமிழகத்தில் எனக்குத் தெரிந்த ஒரே நிதி கருணாநிதி தான் ஆளுநர் இல.கணேசன் கிண்டல்



ஸ்ரீவில்லிபுத்தூர் : ஜன. 4, தமிழகத்தில் பொங்கல் தொகுப்பிற்கு நிதி வழங்குவது குறித்த கேள்விக்கு, 'எனக்குத் தெரிந்த ஒரே நிதி கருணாநிதி மட்டும்தான். வேறு நிதியை எனக்கு தெரியாது' என நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் கிண்டலாக பதிலளித்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் சுவாமி தரிசனம் செய்ய வந்தார். ஆண்டாள் ரெங்கமன்னார் சந்நிதி, ஆண்டாள் அவதரித்த நந்தவனம், வடபத்ரசயனர் சந்நிதி ஆகியவற்றில் இல.கணேசன் சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோயில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டு, பிரசாதம் வழங்கப்பட்டது.

அதன் பின் செய்தியாளர்களை சந்தித்த அவர், வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக விருதுநகர் வந்தேன். அப்படியே மார்கழி மாதத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய வந்தாக தெரிவித்தார்.

இங்கு கோயிலுக்கு வந்த டெல்லியை சேர்ந்தவர்கள் என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அவர்களிடம் இது தென்னகத்து மீராவின் ஆலயம் என பெருமையுடன் குறிப்பிட்டேன். பக்தி மற்றும் அர்ப்பணிப்பின் முழு உருவம் ஆண்டாள். தமிழக வெள்ள பாதிப்பிற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்யும். அப்போது, செய்தியாளர்கள், தமிழகத்தில் பொங்கல் தொகுப்பிற்கு நிதி வழங்குவது குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர், 'எனக்கு தெரிந்த ஒரே நிதி முன்னாள் முதல்வர் கருணாநிதி மட்டும் தான். வேறு நிதி தெரியாது' என கிண்டலாக கூறினார்.

## சாலை, நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற 24 மணி நேரம் கெடு : மாநகராட்சி அதிரடி




நெல்லை : ஜன. 4-

நெல்லையில் சாலை, நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற 24மணிநேரம்கெடுவிதித்து மாநகராட்சி ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

நெல்லையில் சாலை, கால்வாய்கள் எனப் பல இடங்கள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாகப் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி மக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். அதேபோல்,கால்வாய்கள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதால், மழை நீர் வெளியேறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நெல்லை மாநகராட்சிநடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுதொடர்பாக நெல்லை மாநகராட்சி ஆணையர் தாக்ரே சுபம் ஞானதேவ்ராவ் நேற்று காலை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,மக்கள்நடமாட்டம் மிகுந்த சாலைகளில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாகப் பலர் கடைகள் மற்றும் பொருட்கள் வைத்துள்ளனர். அதேபோல்,மேற்கூரைகள் அமைத்துள்ளனர்.மேலும், பலர் கால்வாய்களை ஆக்கிரமித்து கட்டிடங்களைக் கட்டியுள்ளனர். பல இடங்களில் கட்டிடக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், சாலைகள், நடைபாதைகளை ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள், மேற்கூரைகள் ஆகியவற்றை 24 மணி நேரத்திற்குள் அகற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல், கால்வாய் ஆக்கிரமிப்பு மற்றும் கொட்டப்பட்டுள்ள கட்டிடக் கழிவுகளையும் அகற்ற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அவற்றை அகற்ற தவறினால், மாநகராட்சியே ஆக்கிரமிப்புகளை அகற்றும். அதற்கான செலவை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்தே வசூலிக்கப்படும் என அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் வளர்மதி நேற்று கலவை அடுத்த குட்டியம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் நியாய விலை கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொது மக்களுக்கு வழங்கப்படும் துவரம் பருப்பு தரம் குறைவாக உள்ளதை ஆய்வு செய்து உடனடியாக அதனை மாற்றி தரமான பொருட்களை விநியோகம் செய்ய வேண்டும் என நியாய விலை கடை விற்பனையாளருக்கு அறிவுறுத்தினார்.

## அமலாக்கத் துறை சம்மனை 3–வது முறையாக புறக்கணித்த அரவிந்த் கேஜ்ரிவால் : காரணம் கூறும் ஆம் அத்மி கட்சி



புதுடெல்லி : ஜன. 4, டெல்லிமதுபானகொள்கை வழக்கில் அமலாக்கத் துறையின்சம்மனைமீண்டும் புறக்கணித்துள்ளார் அம்மாநில முதல்வரும் ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப் பாளருமான அரவிந்த் கேஜ்ரிவால். இதனை அக்கட்சிஉறுதிசெய்துள்ளது. "டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் ஆஜராக மாட்டார். அமலாக்கத் துறையின் சம்மன் சட்டவிரோதமானது, அரவிந்த் கேஜ்ரிவாலை கைது செய்வது மட்டுமே அதன் நோக்கம்" என்று அக்கட்சி சாடியுள்ளது.

இது தொடர்பாக ஆம் ஆத்மி கட்சி தரப்பில், "எங்கள் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் விசாரணை அமைப்பின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார். ஆனால், தேர்தலுக்கு முன்பாக அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதற்கு காரணம் அவரை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட விடாமல் தடுக்கவேண்டும் என்பதே. கேஜ்ரிவாலை கைது செய்வது மட்டுமே அமலாக்கத் துறையின் நோக்கமாக இருக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் அமலாக்கத் துறை அனுப்பியிருக்கும் 3-வது சம்மன் இதுவாகும். ஏற்கெனவே கடந்த ஆண்டு நவ. 2 மற்றும் டிச. 21 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. அந்த இரண்டு விசாரணைகளுக்கும் ஆஜராகாமல் அரவிந்த் கேஜ்ரிவால்தவிர்த்திருந்தார்.

அமலாக்கத் துறையால் முதல் சம்மன் அனுப்பப்பட்டதில்இருந்தே, விசாரணைக்கு பின்னர் அரவிந்த் கேஜ்ரிவால் கைது செய்யப்படலாம் என்று தீவிரமான ஊகங்கள் நிலவி வருகின்றன. ஆம் ஆத்மி கட்சியின்தலைவர்கள் பலர் இதனை சுட்டிக்காட்டியே அறிக்கைகளை வெளியிடுகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது. இந்த வழக்கு தொடர்பாக டெல்லியின் முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கடந்த பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார்.அக்கட்சின் மாநிலங்களவைஉறுப்பினர் சஞ்சய் சிங் காவலில் வைக்கப்பட்டுள்ளார். முன்னதாக இந்த வழக்கு தொடர்பாக டெல்லி முதல்வர் கேஜ்ரிவாலிடம் கடந்த ஏப்ரல் மாதம் சிபிஐ விசாரணைநடத்திஇருந்தது. ஆனால் அவர் மீது குற்றம் சாட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 602 பேருக்கு கொரோனா உறுதி : 312 பேருக்கு ஜேஎன்.1 வகை தொற்று



புதுடெல்லி : ஜன. 4, நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 602 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் கடந்த 24 மணி நேரத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்திய SARS-CoV-2 ஜெனோமிக்ஸ் கூட்டமைப்பு (INSACOG) தரவுகளின்படி, நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வரை நாட்டில் மொத்தம் 312 பேருக்கு கொரோனா ஜேஎன். 1 திரிபு வைரஸ் கண்டறியப்பட்டது, அவற்றில் 47 சதவீதம் கேரளாவில் பதிவாகியுள்ளன. அதாவது, அவை கேரளா (147 பேர்), கோவா (51 பேர்), குஜராத் (34 பேர்), மகாராஷ்டிரா (26 பேர்), தமிழ்நாடு (22 பேர்), டெல்லி (16பேர்), கர்நாடகா (8 பேர்), ராஜஸ்தான் (5 பேர்), தெலங்கானா (2 பேர்), மற்றும் ஒடிசாவில் (ஒருவர்) என பாதிப்பு பதிவாகியுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 602 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுளளது. இந்நிலையில், நாடு முழுவதும் தற்போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 4, 440 ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று தெரிவித்துள்ளது.

தற்போதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை 5,33,371 ஆக உயர்ந்துள்ளது. 4,44,772,72 பேர் கொரோனாவில் இருந்து மீண்டு, டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்தியாவில் இதுவரை 220.67 கோடி டோஸ் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. கர்நாடகா, பஞ்சாப் மற்றும்தமிழ்நாட்டில்தலா ஒருஇறப்பும், கேரளாவில் இரண்டு இறப்புகளும் பதிவாகியுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாபரவலைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. திங்கள்கிழமை (ஜன. 1) புதிதாக 636 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. மேலும் கேரளாவில் 2 பேரும், தமிழகத்தில் ஒருவரும் என மூவர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வளாகம் அருகில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில் கலாம் கனவு இந்தியா 2020 இயக்கம் சார்பில் மெழுகுவர்த்தி ஏத்தி தேமுதிக தலைவர் டாக்டர் விஜயகாந்த் க்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக சமூக ஆர்வலர் ஸ்ரீனிவாசன் கலாம் கனவு இந்தியா இயக்கம் முன்னாள் தலைவர் டாக்டர் ராஜேஷ் கலாம் அவர்கள் கலந்துகொண்டு காஞ்சிபுரத்தில் விஜயகாந்த் சிலை நிறுவ வேண்டும் எனப் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்தார் ... 150க்கும் மேற்பட்ட விஜயகாந்த் ரசிகர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்

## கர்நாடகாவில் ராமர் கோயிலுக்காக 31 ஆண்டுகளுக்கு முன்பு போராடிய இருவர் கைது – பாஜக போராட்டம்



ஹுப்ளி : ஜன. 4, ராமர் கோயிலுக்காக 31 ஆண்டுகளுக்கு முன்பு போராட்டத்தில் ஈடுபட்ட இருவர் தற்போது கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து கர்நாடகாவின் ஹுப்ளி நகரில் பாஜக சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 1992-ம் ஆண்டு அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அப்போது நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்றன. பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயில் கட்ட வலியுறுத்தி நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்ட இருவர் மீது ஹுப்ளி போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். 31 ஆண்டுகளுக்கு முன் பதியப்பட்ட அந்த வழக்கில், இருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த கைதைக் கண்டித்து ஹுப்ளி காவல் நிலையம் முன்பாக பாஜக சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட ஏராளமான தொண்டர்கள், கர்நாடக அரசு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும், இந்துக்களுக்கு எதிராக செயல்படுவதாகவும் கூறி கோஷங்களை எழுப்பினர்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில துணை முதல்வர் டி.கே. சிவகுமார், "இது குறித்து மாநில உள்துறை அமைச்சர் ஏற்கெனவே விரிவாக விளக்கி இருக்கிறார். நாங்கள் அப்பாவியை கைது செய்யவில்லை. நாங்கள் வெறுப்பு அரசியல் செய்யவில்லை. அமைதியை சீர்குலைத்தவர்கள் மீது சட்டம் தனது கடமையை செய்கிறது. பாஜக ஆட்சியில் இருந்தபோது, காங்கிரஸ் கட்சியினருக்கு எதிராகவும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் சட்டத்துக்குப் புறம்பாக நடவடிக்கைகளை எடுத்தது. அதைப் போல நாங்கள் செயல்படவில்லை" என தெரிவித்தார்.

# தேசிய அளவில் வெற்றி பெற்ற செஸ் வீராங்கனைக்கு தத்தனூர் எம்.ஆர். கல்லூரி தாளாளர் பாராட்டு

அரியலூர் , ஜன.4-

தேசிய அளவில் வெற்றி பெற்ற செஸ் வீராங்கனைக்கு, தத்தனூர் எம்.ஆர் கல்லூரி தாளாளர் பாராட்டு தெரிவித்தார்.



அரியலூர் மாவட்டம், செந்துறையை சேர்ந்த, 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவி, செஸ் வீராங்கனை வி. பிரியஞ்சனா, பள்ளிக்கல்வித்துறை சார்பில், வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற, 67வது தேசிய அளவிலான சதுரங்க போட்டியில் முதலிடத்தை பெற்று தங்கம் வென்றார்.

வெற்றி பெற்ற அந்த மாணவியை ஊக்குவிக்கும் விதமாக, அரியலூர் மாவட்ட செஸ் அசோசியேசன் தலைவரும், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்லூரியின் தாளாளருமாகிய எம். ஆர். இரகுநாதன், ரூபாய் 1000 ரொக்கப்பரிசு வழங்கி பாராட்டினார். கல்லூரி இயக்குனர் ஆர். இராசமாணிக்கம் உடனிருந்தார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கிருஷ்ணா புரத்தில் புதிய ரேஷன் கடை திறப்பு

தென்காசி; ஜன- 4

கிருஷ்ணா புரத்தில் 30 ஆண்டுகால பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி துப்புரவு பணியாளர்களால் புதிய ரேஷன் கடை திறந்து வைக்கப்பட்டது.



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் கிருஷ்ணாபுரத்தில் 30 ஆண்டுகால பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று புதிய நியாய விலை கடையை கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 8.10 லட்சம் மதிப்பீட்டில் தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும், கடையநல்லூர் எம்.எல்.ஏவுமான கிருஷ்ண முரளி குட்டியப்பா அவர்கள் தலைமையில், கடையநல்லூர் நகராட்சி துப்புரவு பணியாளர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச்செயலாளர் பொய்கை சோ.மாரியப்பன், நகரசெயலாளர் எம்.கே.முருகன், முன்னாள் நகர செயலாளர் கிட்டு ராஜா, மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் கருப்பையா தாஸ், நகர தொழில்நுட்ப பிரிவுத் தலைவர் கண்ணன், நகர இளைஞர் அணி செயலாளர் ராஜேந்திர பிரசாத், எஸ். கே.முத்துகிருஷ்ணன், நகர எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ஏ.ஆறுமுகம், நகர பொருளாளர் லாலா வி.சண்முகசுந்தரம், மாவட்ட பிரதிநிதி பி.கே.ஆர். சிங்காரவேலு, மாரியப்பன், மோகன் பாபு, தியாகராஜன், வெங்கடசுப்பிரமணியன், வார்டு செயலாளர்கள் எஸ். இசக்கி குமார், சுப்பிரமணியன், இசக்கி, மாரியப்பன், செல்வராஜ், அப்துல் ஜப்பார், யாகூப், உதுமான், மைதீன், முருகையா, மாரிமுத்தையா, இஸ்மாயில், அயூப்கான், சுடலை, அந்தோணி, மாரியப்பன் ஆசாரி, ரவீந்திரன், ராமர் பாண்டியன், மதியழகன், பொன்னுச்சாமி, கமாலுதீன், சைபுல்லா, சந்திரன், சத்யா மாரியப்பன், ராம் பாபு, மாரிதுரை, கல்யாணசுந்தரம், பரசுராமன், காளியப்பன், பாலீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையிலிருந்து பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்காக 10 எண்ணிக்கை கொண்ட மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள் மற்றும் VVPAT இயந்திரங்கள் காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் 11.12.2023 திங்கள் அன்றுகாலை எடுக்கப்பட்டு அன்றுமுதலிருந்து மின்னனு வாக்கு பதிவு இயந்திரத்தின் செயல் விளக்க மையம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காரைக்கால் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் திருநள்ளார் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய மூன்று இடங்களில் 11.12.2023-முதல் செயல்பட துவங்கியது. அன்று முதல் இளம் வாக்காளர்கள் மற்றும் பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகள் மேலும் பொதுமக்கள் தங்கள் மாதிரி வாக்கு பதிவுகளை மூன்று இடங்களிலும் சென்று பதிந்த வண்ணம் உள்ளார்கள். நேற்று வரை ஆட்சியர் வளாகத்தில் அமைக்கப்பட்ட மாதிரி வாக்கு மையத்தில் 800 பேரும் திருநள்ளாறு தாலுகா அலுவலகத்தில் வைக்கப்பட்ட மாதிரி வாக்கு மையத்தில் 730 பேரும் காரைக்கால் தாலுகா அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்கு மையத்தில் 1300 பேரும் தங்கள் வாக்குகளை பதிந்து உறுதி செய்துள்ளார்கள். இதன் ஒரு நிகழ்வாக நேற்று புதன்கிழமை காலை காரைக்காலில் அமைந்துள்ள பல்வேறு இடங்களில் வசிக்கும் மூன்றாம் பாலினத்தவர்கள் மாவட்ட ஆட்சியரகம் வருகை புரிந்து அங்கு வைக்கப்பட்டுள்ள செயல் விலக்க மையத்தில் தங்கள் வாக்குகளை பதிவு செய்து உறுதி செய்தார்கள்.



காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக "விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா" என்ற நாடு முழுவதும் உள்ள முதன்மையான மத்திய அரசின் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு சாமாண்ய மக்களுக்கும் 100 சதவீதம் கொண்டு சேர்க்க இந்த விக்சித் பாரத் சங்கல்ப் யாத்ரா அதாவது "நமது லட்சியம் வளர்ச்சி அடைந்த பாரதம்" என்னும் நிகழ்ச்சி இன்று முதல் வரும் 22.01.2024 வரை நடைபெற உள்ளது" இதன் முதல் நிகழ்வாக இன்று காலை 10.00 மணியளவில் பூவம் பகுதியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அரசு உயர் நிலைப் பள்ளியில் இருந்து இந்த விழிப்புணர்வு வாகன யாத்திரையை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கொடியசைத்து துவக்கி வைக்கவுள்ளார். இது சம்பந்தமான ஆலோசனை கூட்டம் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ் துணை ஆட்சியர் செந்தில்நாதன் குடிமைப் பொருள் வழங்கல் துறை துணை இயக்குனர் சச்சிதானந்தம் மற்றும் சமூக நலத்துறை, நகராட்சி நிர்வாகம், நலவழித்துறை, கல்வித்துறை, வேளாண் துறை, செய்தி மற்றும் விளம்பரத்துறை, ஆதிதிராவிட நலத்துறை, வட்டார வளர்ச்சி அலுவலகம், வேளாண்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்,

# புதுக்கோட்டையில் வருவாய் மாவட்ட அளவிலான வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் தொடங்கி வைத்தார்

புதுக்கோட்டை, ஜன.4-

புதுக்கோட்டை இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் அனைத்து உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் 8- ம் வகுப்புமுதல் 10-ம்வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கான வருவாய் மாவட்ட அளவிலான வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. வந்திருந்த அனைவரையும் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியை தமிழரசி வரவேற்றுபேசினார். நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர் இரமேஷ் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா கலந்துகொண்டு தலைமை தாங்கி அறிவியல் கண்காட்சியினை தொடங்கி வைத்து பேசும்போது கூறியதாவது,



தென்னிந்திய அறிவியல் கண்காட்சி என்பது 6 தென் மாநிலங்களை உள்ளடக்கி வருடந்தோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இந்த அறிவியல் கண்காட்சியானது குறிப்பாக 8,9,10 ஆகிய வகுப்பு மாணவர்களுக கு அறிவியல் ஆர்வம் மற்றும் அறிவியல் நாட்டத்தின் மூலம் அறிவியல் கண்டுபிடிப்புகளைஉருவாக்கும் விதமாக ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் நடைபெற்ற இக்கண்காட்சியில் ஒரு மாணவர், ஒரு ஆசிரியர் இணைந்து பங்கேற்க கூடிய தனிப்பட்ட வகை, 2 மாணவர்கள், ஒரு ஆசிரியர் இணைந்து பங்கேற்க கூடிய குழு வகை, ஒரு ஆசிரியர் மட்டும்பங்கேற்ககூடிய ஆசிரியர் வகை ஆகிய 3 பிரிவுகளாக பங்கேற்கலாம். இயற்பியல், வேதியியல், கணிதம்,பூமி மற்றும் விண்வெளி அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், பொறியியல்,உயிரியியல்,உயிர் வேதியியல் மற்றும் கணினி அறிவியல் ஆகிய பாடங்களில் படைப்புகள் காட்சிப்படுத்தலாம். இதிலிருந்து முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பெறுபவர்கள் கடலூர் மாவட்டத்தில் வருகிற 6 ந்தேதி முதல் 8- ந்தேதி வரை 3 நாட்கள் நடைபெறும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியில் பங்கேற்று வெற்றி பெற வாழ்த்துகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

இக்கண்காட்சியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் இருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் 70 படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர். இந்த நிகழ்ச்சியில் கண்காட்சி ஒருங்கிணைப்பு தலைமையாசிரியர்கள் ஜெயராஜ், சோமசுந்தரம், முத்துக்குமார், மாவட்டச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மெ.சி.சாலை செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குரு.மாரிமுத்து , முதுகலை, பட்டதாரி ஆசிரியர்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட நடுவர் குழுவினர், பதிவுக்குழுவினர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# ஆற்காடு அருகே பெண்கள் திடீர் சாலை மறியலால் பரபரப்பு

ஆற்காடு,ஜன,4

ராணிப்பேட்டை மாவட்டம். ஆற்காடு அடுத்த புதுப்பாடி பகுதியில் 100 நாள் வேலை செய்யும் பணியாளர்களை அதன் ஒன்றிய மேற்பார்வையாளர் கௌரி என்பவர் அவதூறாகவும் தரைகுறைவாகவும் பேசியதாக கூறி அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, 100 நாள் வேலை செய்யும் பெண்கள் திடீரென புதுப்பாடி கூட்ரோடு சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினர், 100 நாள் வேலை செய்யும் பணியாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து அனைவரும் மறியல் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர். திடீர் என நடைபெற்ற இந்த சாலை மறியல் போராட்டம் காரணமாக அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# வேலூரில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் துவக்கம்

வேலூர். ஜன.4.

வேலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர் ஆனந்த் ஆகியோர், குடியாத்தம் திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தனர்.



அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், நகர்மன்ற தலைவர் சௌந்தர் ராஜன், ஒன்றியக் குழுத் தலைவர் சத்தியானந்தம், முதன்மைக் கல்வி அலுவலர் மணிமொழி, குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் வெங்கட்ராமன், கே.எம்.ஜி கல்வி நிறுவனங்கள் தலைவர் கே.எம்.ஜி. சுந்தரவதனம், செயலாளர் கே.எம்.ஜி. இராஜேந்திரன் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். நேதாஜி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆண்டிமடம் பேருந்து நிலையத்தை சீரமைக்க வேண்டும்: பாமக கோரிக்கை

*அரியலூர்; ஜன-4 இடித்து சேதப்படுத்தப்பட்ட ஆண்டிமடம் பேருந்து நிலையத்தை சீரமைக்க வேண்டும் என்று பாமக மாநில நிர்வாகி கோரிக்கை விடுத்துள்ளார்.*



*அரியலூர் மாவட்டம், ஆண்டிமடத்தில் இடித்து சேதப்படுத்தப்பட்ட பேருந்து நிலையத்தை சீரமைக்க வேண்டும் இல்லையேல் போராட்டம் நடத்தப்படும் என்று பாட்டாளி மக்கள் கட்சி பிரமுகரும், வன்னியர் சங்க மாநில செயலாளருமான க.வைத்தி கூறியுள்ளார். இது பற்றி அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது,*

*மருத்துவர் அன்புமணி இராமதாஸ் 2007-2008 ம் ஆண்டில் மத்திய அமைச்சராகஇருந்தபோது, அவரது இராஜ்யசபா உறுப்பினர் நிதியில், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் கட்டப்பட்டது. தற்போது சாலை விரிவாக்கம் என்ற பெயரில் பேருந்து நிலையத்தின் முகப்புப் பகுதி இடித்து சேதப்படுத்தப்பட்டுள்ளது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம். இதை உடனடியாக சரிசெய்யப் படாவிட்டால், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.*

# தரங்கம்பாடி பேரூராட்சி பகுதியில் "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாம்





தரங்கம்பாடி, ஜன- 04:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா தரங்கம்பாடி பிரதான சாலையில் உள்ள ராஜா ராணி திருமண மண்டபத்தில் "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன் ஆகியோர் தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு ஒப்புகை சீட்டினை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமில் 13 துறைகள் மூலமாக வழங்கப்படும் சேவைகளை பெறுவதற்கு பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கலாம். அதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் புதியமின் இணைப்பு பெறுதல், மின் கட்டண மாற்றங்கள், மின் இணைப்பு பெயர் மாற்றம், கூடுதல் மின் சுமை கட்டணங்கள் புகார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பட்டா மாறுதல், பட்டா உட்பிரிவு, இணையவழி பட்டா, வாரிசு சான்றிதழ், வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் பெறுதல், முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மூன்றாம் பாலினத்தவர்க்கான உதவித்தொகை கோரி விண்ணப்பங்களை வழங்கலாம். அதேபோன்று, பேரூராட்சி துறையில் கட்டுமான வரைபட ஒப்புதல் பெறுவதற்கும், சொத்துவரி, குடிநீர், பெயர் மாற்றங்களுக்கும், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புக்கும், பிறப்பு, இறப்பு சான்றிதழ்க்கும், காலிமனை வரிவிதிப்பு, சாலையோர வியாபாரிகள் அடையாள அட்டை கோரியும், காவல்துறையில், பொருளாதார குற்றங்கள் தொடர்பான புகார்களும், நிலஅபகரிப்பு, மற்றும் மோசடி தொடர்பான புகார்கள், போக்சோ சட்ட புகார்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் கட்டுமான வரைபட ஒப்புதல், நில உபயோக மாற்றத்திற்கான ஒப்புதல், மனுக்கள் வழங்கலாம். மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில், அடையாள அட்டை, பாராமரிப்பு உதவித்தொகை, பெட்ரோல் ஸ்கூட்டர், சக்கர நாற்காலி, மூன்று சக்கர வண்டி, செயற்கை கால், இதர உபகரணங்கள் தொடர்பான கோரிக்கை மனுக்களும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையில், பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், புதுமைப்பெண் திட்டம், ஆதரவற்றோருக்கான உதவித்தொகைக்கான மனுக்களும், ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் கல்வி உதவித்தொகை, வீட்டுமனை மற்றும் இணையவழி பட்டாவிற்கான மனுக்களும், தாட்கோ கடனுதவி, கூட்டுறவு கடனுதவி, மகளிர் சுயஉதவிக்குழு கடனுதவி, தொழில் முனைவோருக்கான கடனுதவி ஆகியவைகளுக்கான கோரிக்கை மனுக்களும், தொழிலாளர் நலத்துறையில், நலவாரியங்கள் உறுப்பினர் பதிவு, உதவித்தொகை, ஓய்வூதியம் பெறுவதற்கான கோரிக்கை மனுக்கள் ஆகியவைகளை இம்முகாமில் பொதுமக்கள் வழங்கலாம்.

இம்முகாமில், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் மக்களின் கோரிக்கைகளை பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, மனுக்களுக்கு தீர்வு காணப்படும். இம்முகாமானது, மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவரை 05.01.2024, 06.01.2024 ஆகிய தினங்களிலும் தரங்கம்பாடி பேரூராட்சியில் 03.01.2024, 04.01.2024, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியில் 05.01.2024, 06.01.2024, ஆகிய தினங்களில் வார்டு வாரியாக பிரிக்கப்பட்டு "மக்களுடன் முதல்வர்" சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. எனவே, பொதுமக்கள் இம்முகாமினை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் ஆய்வாளர் மணிமேகலை, தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், பொறையார் காவல் ஆய்வாளர் சிங்காரவேலு, பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன், சுகாதார ஆய்வாளர் இளங்கோவன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜேந்திரன், தரங்கம்பாடி பேரூராட்சி திமுக செயலாளர் முத்துராஜா மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆரணி பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் காங்கிரஸ் திமுக கட்சிகள் இடையே கருத்து வேறுபாடு உச்சகட்டத்தை எட்டியது

ஊத்துக்கோட்டை,டிச4-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பேரூராட்சியில் பஸ் நிறுத்தம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.





இப்பேரூராட்சிமன்ற தலைவராக திமுகவைச் சேர்ந்த ராஜேஸ்வரி என்பவரும், துணைத்தலைவராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுகுமார் என்பவரும் பதவி வகுத்து வருகின்றனர். இந்நிலையில், ஆரணி பேரூராட்சிமன்றத்தில் டெண்டர் பிரச்சினையால் தலைவர் தரப்பினரும், துணைத் தலைவர் தரப்பினரும் நான்கு மாதங்களுக்கு முன்பு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.இதனால் ஆரணி காவல் நிலையத்தில் இரண்டு தரப்பினரும் புகார் செய்தனர்.

இதன் அடிப்படையில் இரண்டு தரப்பினர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.இந்நிலையில், நேற்று நடைபெற்ற மக்களுடன் முதல்வர் என்ற நிகழ்ச்சியில் மின்சார வாரியம்,வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித் துறை, காவல்துறை, மாற்றுத்திறனாளிகள் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது.இம்மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் 30 நாட்களுக்குள் மனுதாரருக்கு உரிய பதில் அளிக்க வேண்டும்.

இந்நிகழ்ச்சியை, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் தலைமை தாங்கி துவக்கி வைப்பார் எனவும், பொன்னேரி தொகுதி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குவார் எனவும் கூறப்பட்டது. ஆனால், டெண்டர் பிரச்சினையால் ஏற்பட்ட மோதல் காரணமாக இரண்டு கட்சியினர் இடையே கருத்து வேறுபாடு உச்சக்கட்டம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று நடைபெற்ற மக்களுடன் முதல்வர் என்ற நிகழ்ச்சியில் பொன்னேரி தொகுதி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

பின்னர், அதிகாரிகளிடம் இது எனது தொகுதி எனவே முதல்வரின் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துங்கள் என்று அறிவுரை வழங்கி விட்டு சென்றார்.மேலும்,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் வந்து கொண்டுள்ளார் என்று கட்சி நிர்வாகிகள் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏவிடம் கூறியதை அவர் காது கொடுத்து கேட்காமல் காரில் ஏறி சென்று விட்டார்.சிறிது நேரத்தில் அங்கு வந்த திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் இதோ! வந்து விடுகிறேன் என்று கூறினேன். ஆனால், நிகழ்ச்சியை துவக்கி வைத்து விட்டு துரை.சந்திரசேகர் எம். எல்.ஏ சென்று விட்டாரா? என்று அதிகாரிகளிடமும், கட்சியினரிடமும் கேட்டுவிட்டு சம்பிரதாயத்திற்கு மேடையில் ஏறி அமர்ந்தார். பின்னர், திருவள்ளூர் செல்வதாக கூறிவிட்டு டி.ஜே. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ சென்றார்.

டெண்டர் பிரச்சினையால் காங்கிரஸ் கட்சிக்கும்,திமுகவுக்கும் இடையே கருத்து வேறுபாடு உச்சகட்டத்தை அடைந்துள்ளது என அங்கிருந்த சிலர் கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது.மேலும், பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளை சேர்ந்த பொதுமக்களும் இந்தத் திருமண மண்டபத்தில் போதிய இடவசதி இல்லாமல் மனு கொடுக்க நீண்ட வரிசையில் சிரமத்துடன் காத்திருந்தனர்.மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் குடிக்க குடிநீர்,உட்கார சேர்,பந்தல் வசதி உள்ளிட்டவை செய்யவில்லையே என இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த முதியவர்கள் அதிருப்தியுடன் கூறினர்.இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ஜெயக்குமார், ஆரணி பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் அர்ஜுன், ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து, பேரூராட்சி மன்ற நியமனக்குழு உறுப்பினர் டி.கண்ணதாசன்,ஆரணி பேரூர் திமுக பொருளாளர் கு.கரிகாலன் உள்ளிட்ட கட்சியின் முக்கிய பிரமுகர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்,அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கியில் புதிய அறக்கட்டளை துவக்க விழா



அறந்தாங்கி; ஜன-4 அறந்தாங்கியில் ஹெல்ப் தீ பீப்பிள் பவுண்டேஷன் அறக்கட்டளை புதிதாக துவங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் உதவிக்கு கரம் கொடுப்போம் என்ற நோக்கத்தில் ஹெல்ப் தீ பீப்பிள் பவுண்டேஷன் அறக்கட்டளை துவங்கப்பட்டது. இதில் துவக்க விழாவுடன் அறக்கட்டளை நிறுவனர் ரோட்டரி ஆண்டோ பிரவீன் அவருடைய குழந்தையின் பிறந்தநாள் விழாவும் இணைத்து நடத்தப்பட்டது. அறந்தாங்கி டீ என் எஸ் திருமண மஹாலில் இந்த இரு பெரும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அறந்தாங்கி பகுதியில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தலைவர்களும், நண்பர்களும், பொதுமக்களும் பங்கு பெற்றனர் டாக்டர் ச.தட்சினா மூர்த்தி, திசைகள் மாணவர் வழிகாட்டு அமைப்பு தலைவர் தலைமை தாங்கி உரையாற்றினார். அருட்தந்தை குழந்தைசாமி ஆலங்குடி முன்னிலை வகித்தார். மற்றும் தனியார் அமைப்பு தலைவர்கள், வழக்கறிஞர்கள், திருச்சபை போதகர்கள் பங்கு பெற்றனர். திருமயம் அப்போஸ்தலிக் இந்தியன் மிஷன்ஸ் தலைவர் ரெவ எம் சைமன் பங்கு பெற்று வாழ்த்துரை வழங்கினார். அறந்தாங்கி பகுதியில் ஏழை மக்களுக்கு உதவும் வண்ணமாக ஹெல்ப் தீ பீப்பிள் பவுண்டேஷன் என்ற அறக்கட்டளை துவங்கப்பட்டுள்ளது அறந்தாங்கியில் துவங்கப்பட்ட இந்த அறக்கட்டளை தேசிய அளவில் சிறப்பாய் பணியாற்றி வளர வேண்டும் என்று வாழ்த்துக்கள் கூறி, அதன் நிறுவனர் ரோட்டரி ஆன்டோ பிரவீன் அவர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டது.

ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் வளம் பெற தையல் இயந்திரம், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம், நலிந்தோருக்கு ஆடுகள், ஏழ்மை குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு நிதி உதவி போன்ற உதவிகள் பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டது. பங்கு பெற்ற அனைத்து பயனாளிகளும் மகிழ்ச்சியோடு சென்றனர். நிகழ்ச்சியின் இறுதியில் அறக்கட்டளையின் செயலாளர் நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே டூவீலர் மோதல் ஒருவர் பலி



ஆலங்குடி ஜன04;

புதுக்கோட்டை மாவட்டம் மறமடக்கி திருவாச்சி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் பூபாலன் மகன் தனசேகரன் (வயது 26). இவர் கீரமங்கலத்தில் உள்ள ஒரு பாத்திரக்கடையில் வேலை செய்கிறார். இவர் நேற்று காலை வழக்கம் போல மறமடக்கியில் இருந்து சம்பங்கி பூ மூட்டையுடன் கீரமங்கலம் நோக்கி வந்து கொண்டிருந்த போது கீரமங்கலம் முந்திரிக்காடு சாலையில் சேந்தன்குடி பிரிவு மண்பாதை அருகே சென்ற போது மேற்பனைக்காடு கிராமத்தைச் சேர்ந்த அய்யாவு மகன் கிருஷ்ணகுமார் (வயது 24) எதிரே ஒரு பைக்கில் அதிவேகமாக வந்து மோதியதில் தனசேகரன் கை, கால், இடுப்பு, தலை என உடலெங்கும் உடைந்து பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவர் சென்ற பைக்கும் உடைந்து சிதறிக்கிடந்தது.

இந்த விபத்தில் கிருஷ்ணகுமார் சாலையின் மற்றொரு பள்ளத்தில் படுகாயத்துடன் கிடந்துள்ளார். அந்த வழியாக வந்தவர்கள் கீரமங்கலம் போலீசாருக்கும் 108 ஆம்புலன்ஸ்க்கும் தகவல் கொடுத்துள்ளனர். படுகாயத்துடன் கிடந்த கிருஷ்ணகுமாரை 108 ஆம்புலன்சில் ஏற்றி புதுக்கோட்டை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த போலீசார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த தனசேகரனை அமரர் ஊர்தியில் ஏற்றி பிரேதப் பரிசோதனைக்காக அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காலை நேரத்தில் நடந்த இந்த விபத்து சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# வெற்றிகரமாக நடந்து முடிந்தது சங்கரன்கோவில் 2 வது பொதிகை புத்தகத் திருவிழா



சங்கரன்கோவில்; ஜன-4 சங்கரன்கோவில் 2 வது பொதிகை புத்தகத் திருவிழா வெற்றிகரமாக நடந்து முடிந்தது. 50லட்சம் ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தின் 2வது பொதிகை புத்தகத் திருவிழா சங்கரன்கோவில் அரசு ஆண்கள் பள்ளி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் கடந்த டிசம்பர் 24 ம் தேதி தொடங்கி ஜனவரி 2ஆம் தேதி வரை நடைபெற்றது. புத்தக திருவிழாவில் 50 புத்தக அரங்குகள், 10 அரசு அலுவலக அரங்குகள் என லட்சக்கணக்கான புத்தகங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. இந்த புத்தகத் திருவிழாவில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும், பொதுமக்களும் மிகுந்த ஆர்வத்துடன் புத்தகங்களை வாங்கிச் சென்றனர். மேலும் தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம் சார்பில் ஸ்டால் அமைக்கப்பட்டு 6ம்வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை உள்ள புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இரண்டாவது புத்தகத் திருவிழா நேற்று முன்தினம் இரவு முடிந்தது. நடந்து முடிந்த இந்தப் புத்தகத் திருவிழாவில், 10 நாட்களில் மொத்தம் 50 லட்சம் ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனை ஆனது. 19740 பள்ளி மாணவர்கள், 15485 கல்லூரி மாணவர்கள் மற்றும் 2,82,052 பொதுமக்கள் என மொத்தம் 3,16,177 பார்வையாளர்கள் வருகை புரிந்தனர். விழாவில் பட்டிமன்றம், கலை நிகழ்ச்சி என பல நிகழ்வுகள் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் உள்ளிட்டோருடன் இணைந்து சிறப்பாக நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் நடந்த நிறைவு விழா நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் துரை.ரவிச்சந்திரன் தலைமை வகித்தார் . தென்காசி வடக்கு திமுக மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ முன்னிலை வகித்தார். மாவட்ட மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) முத்துக்குமார் வரவேற்றார் . விழாவில் பணிபுரிந்த அரசு அலுவலர்கள், தன்னார்வலர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் மற்றும் ராஜா எம்எல்ஏ ஆகியோர் நினைவு பரிசும், சான்றிதழ்களும் வழங்கி பாராட்டினர்.

இந்நிகழ்ச்சியில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். சதன் திருமலை குமார், சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், நகராட்சி கமிஷனர் சபாநாயகம், மேலாளர் செந்தில் வேல்முருகன், சாரதி ராம் அறக்கட்டளை நிறுவனர் பிஜிபி ராமநாதன், திமுக வடக்கு மாவட்ட பொருளாளர் சரவணன் திமுக ஒன்றியச் செயலாளர்கள் கடற்கரை கிறிஸ்டோபர், பெரிய துறை சேர்ம துரை வெற்றி விஜயன் சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், கார்த்தி, மணிகண்டன், அன்சாரி, ராஜராஜன், நகர அவைத் தலைவர் முப்பிடாதி, திருவேங்கடம் பேரூர் கழகச் செயலாளர் மாரிமுத்து, ராஜா எம்எல்ஏவின் நேர்முக உதவியாளர் வக்கீல் செந்தில், நகரத் துணைச் செயலாளர்கள் முத்துக்குமார், சுப்புத்தாய், தகவல் தொழில் நுட்ப அணி சிவாஜி, கணேசன், ஜான், ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கரசிந்தாமணி, ஓய்வு பெற்ற தாசில்தார் சூரிய நாராயண மூர்த்தி, உடற்கல்வி இயக்குனர் முனைவர் நாராயணன், ஆசிரியர் சங்கர் ராம், கவிஞர் ஈஸ்வரமூர்த்தி, மதியழகன், ஜெயகுமார், மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகைக் கண்காட்சியை பார்வையிட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள்



புதுக்கோட்டை : ஜன. 4,

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் புதுக்கோட்டை இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை நடத்திய சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகைக் கண்காட்சியை பார்வையிட்டனர். ஏழாவது தேசிய சித்த மருத்துவ தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை நடத்திய சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகைக் கண்காட்சி அரசு தலைமை மருத்துவமனையில் நடைப்பெற்றது.

இந்த சித்த மருத்துவ முகாம் மற்றும் மூலிகைக் கண்காட்சியை நூற்றுக்கும் மேற்பட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பார்வையிட்டனர். பக்க விளைவுகள் ஏற்படுத்தாத சித்த மருத்துவம் இன்றைக்கு ஏராளமான நோய்களை குணப்படுத்தி வருவதையும், நோய் தீர்க்கும் அரிய மூலிகைகளின் பெயர்களையும் அவற்றின் பயன்களையும் மாணவர்கள் முகாம் நடத்தும் மருத்துவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

கண்காட்சியைப் பார்வையிட்ட மாணவர்கள் கூறும்போது "நாங்கள் தினந்தோறும் சாலையோரங்களில், வீடுகளுக்கு அருகில் காண்கின்ற பல தாவரங்கள் நோய் தீர்க்கும் வரங்களாக அமைந்திருக்கின்றன என்பதை கண்காட்சியில் பார்த்துத் தெரிந்து கொண்டோம். இந்த முகாம் மற்றும் மூலிகைக் கண்காட்சியைப் பற்றி எங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களிடமும் எடுத்துக் கூறுவோம்" என்று தெரிவித்தனர். சித்த மருத்துவம் மற்றும் மூலிகைக் கண்காட்சியை மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மருத்துவர் வனஜா தலைமையில் மருத்துவர்கள் வேங்கட கிருஷ்ணன், மணிவண்ணன், ரெங்கநாயகி, சுயமரியாதை, சுந்தரேஸ்வரி ஆகியோர் சிறப்பாக அமைத்திருந்தனர்.

### தச்சன்குறிச்சி ஜல்லிக்கட்டு விழா

# முன் ஏற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சியர் ஐ.சா. மெர்சி ரம்யா பார்வையிட்டார்



*கந்தர்வகோட்டை, ஜன. 4–*

*தச்சன்குறிச்சி ஜல்லிக்கட்டு விழா முன் ஏற்பாட்டுபணிகளை மாவட்ட ஆட்சியர் ஐ.சா. மெர்சிரம்யா புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், தச்சன்குறிச்சி ஊராட்சியில் உள்ள அடைக்கல அன்னை பேராலய திருவிழாவை முன்னிட்டு தமிழகத்தில் முதல் ஜல்லிக்கட்டு விழா ஜன.6ல் நடைபெற உள்ளது. அதற்கான வாடிவாசல் அமைத்தல், காளைகளின் ஒடுதளம், தடுப்பு கம்பிகளை அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. அது அரசின் விதிமுறைப்படி அமைக்கப்பட்டுள்ளதா என மாவட்ட ஆட்சியர் ஐ.சா.மெர்சிரம்யா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, வருவாய் கோட்டாச்சியர் முருகேசன், ஒன்றிய குழு தலைவர் ரா.ரெத்தினவேல் கார்த்திக், மாவட்ட கால்நடை இணை இயக்குநர் ரவிசந்திரன், வட்டாட்சியர் வி.ராமசாமி மற்றும் விழா கமிட்டியினர் உடனிருந்தனர்.*

# பீகாரில் தனிப்பயிற்சி மையங்கள் நடத்தினால் கடும் நடவடிக்கை : பள்ளி ஆசிரியர்களுக்கு கடும் எச்சரிக்கை



*பீகார் : ஜன. 4, பள்ளி ஆசிரியர்கள் தனிப்பயிற்சி மையம் நடத்துவது, அல்லது தனியார் பயிற்சி மையங்களில் பணிபுரிவது கண்டறியப்பட்டால் அவர்களின் மீது கடும் நடவடிக்கைஎடுக்கப்படும் என பீகார் மாநில அரசு எச்சரித்துள்ளது.*

*பீகார் மாநிலத்தில் 12,761 தனியார் பயிற்சி மையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த மையங்களில் ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். அரசு தேர்வுகளில் இந்த தனிப்பயிற்சி மையங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தேர்வின்போது பல்வேறு முறைகேடுகளும் செய்வதாக அரசுக்கு தொடர்ந்து குற்றச்சாட்டுகள் வந்த வண்ணம் உள்ளன. இதனால் இந்த ஆண்டு தேர்வை நியாயமான முறையில் நடத்திட பீகார் அரசு திட்டமிட்டுள்ளது.*

*அதற்காக தனிப்பயிற்சிமையங்களை ஒழுங்குமுறைப் படுத்தவும், அதில் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பணி புரிவதையும், அவர்கள் மூலம் தவறுகள் நடக்காமல் தடுக்கவும் அரசு முன்வந்துள்ளது. மாநிலத்தின் பள்ளி தேர்வு வாரிய நடைமுறை மற்றும் கோட்பாடு தேர்வுகள் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு ஜன. 10ம் தேதி முதல் தொடங்கப்பட உள்ளது.*

*எனவே தங்களுடைய பள்ளிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களும் பணிக்கு வருவதை அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும், மாநிலத்தின் அனைத்து மாவட்ட கல்வி அதிகாரிகளையும் தனியார் நிறுவனங்களில் வகுப்பு எடுக்கும் ஆசிரியர்களின் விவரங்களை தலைமையகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் பீகார் அரசு உத்தரவிட்டுள்ளது.*

*ஆசிரியர்கள் தனியார் பயிற்சி நிறுவனங்களில் வகுப்புகள் எடுப்பதை கண்டறிந்தால் அவர்கள் மீது துறை ரீதியான சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தவறு செய்யும் தனியார் பயிற்சி நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு தெரிவித்துள்ளது. மேலும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள்யாரும்தங்கள் நிறுவனங்களில் வகுப்பு எடுக்க மாட்டார்கள் என்றும் தனியார் பயிற்சி மையங்களில் இருந்து எழுத்துப்பூர்வமாக மாவட்ட ஆட்சியருக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும் என்றும் பீகார் அரசு உத்தரவிட்டுள்ளது.*

# பாஜகவில் இணைந்த 2 சிறப்பு எஸ்ஐக்கள் சஸ்பெண்ட் : தஞ்சை சரக டிஐஜி அதிரடி



நாகை : ஜன. 4, பாஜகவில் இணைந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்கள் 2 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள சம்பவம் தமிழக காவல் துறை வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, 'என் மண், என் மக்கள்' என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு மத்திய அரசின் கடந்த 9 ஆண்டு கால சாதனைகளை 234 தொகுதிகளிலும் பொதுமக்களிடம் விளக்கும் விதமாக இந்த 'என் மண், என் மக்கள்' நடைபயண ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 'என் மண், என் மக்கள்' நடைபயணத்தின்போது காவல் துறை சீருடை அணிந்து கார்த்திகேயன் மற்றும் ராஜேந்திரன் ஆகிய 2 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் தங்கள் செல்போனில் இருந்து மிஸ்கால் கொடுத்து பாஜகவில் இணைந்தனர்.

இதனை தொடர்ந்து இருவரும் சீருடையில் இருந்தவாறு பாஜகவில் இணைந்தது வைரலான நிலையில், ஆயுதப்படைக்கு மாற்றி நாகை எஸ்பி அதிரடி நடவடிக்கை எடுத்தார். இந்தநிலையில், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கார்த்திகேயன், ராஜேந்திரன் ஆகியோரை சஸ்பெண்ட் செய்து தஞ்சை சரக டிஐஜி உத்தரவிட்டுள்ளார்.

# கர்னி சேனா தலைவர் கொலை வழக்கு : ராஜஸ்தான், ஹரியாணாவில் 31 இடங்களில் என்ஐஏ சோதனை

புதுடெல்லி : ஜன. 4, கர்னி சேனா தலைவர சுக்தேவ் சிங் கோகமெடி கொலை வழக்கு தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை ராஜஸ்தான், ஹரியாணா மாநிலங்களில் 31 இடங்களில் சோதனை நடைபெற்றது.

ராஜஸ்தான் மாநிலத்தில் செயல்படும் ராஷ்ட்ரீய ரஜபுத்திர கர்னி சேனா பிரிவின் தலைவர் சுக்தேவ் சிங் கோகமெடி. இவர் கடந்த டிசம்பர் 5-ம் தேதி ஜெய்ப்பூரில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இக்கொலைச் சம்பவத்தில் வன்முறை கும்பல்களின் தொடர்பு இருப்பதால், மத்திய உள்துறை அமைச்சகம் சமீபத்தில் இந்த வழக்கை தேசிய புலனாய்வு முகமையிடம் ஒப்படைத்தது. வழக்கு ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபர்களிடம் என்ஐஏ விசாரணை மேற்கொண்டது. அந்த விசாரணையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கொலைத் தொடர்பாக டெல்லி குற்றப்பிரிவு போலீஸார் விசாரணையைத் தொடங்கினர். முதல்கட்ட விசாரணையில் சுக்தேவை சுட்டுக் கொலை செய்த மர்ம நபர்கள், ஹரியாணாவை சேர்ந்த நிதின், ராஜஸ்தானை சேர்ந்த ரோகித் ரத்தோட் என்பது தெரிய வந்தது. இந்தச் சூழலில் நிதினும், ரோகித்தும் தங்க இடம் அளித்த ரம்வீர் சிங் என்பவர் டிச. 9-ம் தேதி ஜெய்ப்பூரில் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து பஞ்சாப் தலைநகர் சண்டிகரில் உள்ள விடுதியில் பதுங்கியிருந்த நிதின், ரோகித் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு துணையாக இருந்த உத்தம் சிங் என்பவரும் கைது செய்யப்பட்டார்.

இதுகுறித்து ராஜஸ்தான் போலீஸார் கூறியதாவது: கர்னி சேனா தலைவர் சுக்தேவ் கொலையில் லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலுக்கு தொடர்பு இருக்கிறது. அந்த கும்பலை சேர்ந்த ரோகித் கடோரா வெளிநாட்டில் பதுங்கி உள்ளார். அவரது உத்தரவின்பேரில் நிதினும் ரோகித் ரத்தோட்டும் சேர்ந்து சுக்தேவை கொலை செய்துள்ளனர். கொலையாளி ரோகித் ரத்தோட் - கர்னி சேனா தலைவர் சுக்தேவ் இடையே ஏற்கெனவே முன்பகை இருந்துள்ளது. பாலியல் வன்கொடுமை வழக்கில் ரோகித் ரத்தோட் சிறை செல்ல சுக்தேவ் காரணமாக இருந்துள்ளார்.

இதுதொடர்பாக 3 பேரை கைது செய்துள்ளோம். அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. கைது செய்யப்பட்டவர்களில் நிதின் என்பவர் முன்னாள் ராணுவ வீரர் ஆவார். வெளிநாட்டில் பதுங்கியுள்ள லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலைச் சேர்ந்த ரோகித் கடோரா குறித்தும் விசாரணை நடத்தி வருகிறோம். முழுமையான விசாரணைக்குப் பிறகே கொலைக்கான உண்மையான காரணம் தெரிய வரும் என்று தெரிவித்திருந்தனர்.

# வழிகாட்டும் ஆந்திர மாநிலம் – முதியோர் ஓய்வூதியத்தை ரூ. 3,000 ஆக உயர்த்த அன்புமணி கோரிக்கை

சென்னை : ஜன. 4, "முதியோர், கைம்பெண் ஓய்வூதியத்தை ரூ.3 ஆயிரமாக்க வேண்டும்; பயனாளிகளை 1.05 கோடியாக்க வேண்டும்" என்று தமிழக அரசுக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், "ஆந்திர மாநிலத்தில் முதியோர், கைம்பெண்கள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கான மாத ஓய்வூதியம் ரூ. 3,000 ஆக உயர்த்தபட்டுள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கையும் 66.34 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகன் ரெட்டி நேற்று தொடங்கி வைத்திருக்கிறார். ஆந்திர மாநில மக்களுக்கு சமூக நீதியும், சமூகப் பாதுகாப்பும் வழங்குவதில் இந்தத் திட்டம் மிகப்பெரிய மைல்கல் ஆகும்.

ஆந்திர மாநிலத்தில் முந்தைய தெலுங்கு தேசம் ஆட்சியின் போது பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் வெறும் ரூ.1000 மட்டுமே. பயனாளிகளின் எண்ணிக்கையும் 39 லட்சமாக மட்டுமே இருந்தது. கடந்த ஐந்தாண்டுகளில் மாத ஓய்வூதியம் 3 மடங்கு அளவுக்கும், பயனாளிகளின் எண்ணிக்கை இருமடங்காகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஓய்வூதியத் திட்டத்திற்காக செலவிடப்படும் தொகை ஆண்டுக்கு ரூ.4800 கோடியிலிருந்து ரூ.23,000 கோடியாக, அதாவது நான்கரை மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு வழங்குவதில் இது மிகச்சிறந்த நடவடிக்கை என்பதில் ஐயமில்லை.

ஆனால், தமிழ்நாட்டில் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் எந்த அளவில் செயல்படுத்தப்படுகிறது என்பதை அறிந்தால் ஏமாற்றமும், வருத்தமும் மட்டுமே விஞ்சும். தமிழ்நாட்டில் முதியோர், கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோருக்கு கடந்த பல ஆண்டுகளாக மாதம் ரூ.1000 மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.



இந்த ஓய்வூதியம் ரூ.1500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று திமுக அதன் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், கடந்த ஜூலை மாதத்தில் தான் மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வுதியம் ரூ.1500 ஆகவும், மற்ற பிரிவினருக்கான ஓய்வூதியம் ரூ.1200 ஆகவும் உயர்த்தப்பட்டது. ஆந்திர அரசுடன் ஒப்பிடும் போது இது மிக மிக குறைவு ஆகும்.

மற்றொருபுறம் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையும் மிக மிகக் குறைவாகும். ஆந்திரத்தில் மொத்தம் 66.34 லட்சம் பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இது அம்மாநிலத்தில் உள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையான 96 லட்சத்தில் மூன்றில் இரு பங்காகும். ஆனால், தமிழ்நாட்டில் 2.11 கோடி குடும்பங்களில் ஏழில் ஒருவர் என்ற கணக்கில் 30.55 லட்சம் பேருக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இரு ஆண்டுகளுக்கு முன் இந்த எண்ணிக்கை 34.52 லட்சத்திலிருந்து 2 லட்சம் குறைந்துவிட்டது.

அதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் கோரி 74 லட்சம் பேர் விண்ணப்பித்து காத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது மக்களுக்கு சமூகநீதியும், சமூகப் பாதுகாப்பும் வழங்குவதற்கான அறிகுறி அல்ல.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்திற்காக தமிழக அரசு ஆண்டுக்கு ரூ.5,500 கோடி மட்டுமே செலவிடப்படும் நிலையில், ஆந்திரத்தில் நான்கு மடங்கு அதிகமாக ரூ.23,556 கோடி செலவிடப்படுகிறது. ஆந்திரத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் 66 சதவீதத்தினருக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கப்படும் நிலையில், தமிழ்நாட்டில் குறைந்தது 1.35 கோடி பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்துக் காத்திருக்கும் 75 லட்சம் பேருக்கும் ஓய்வூதியம் வழங்கி, பயனாளிகளின் எண்ணிக்கையை 1.05 கோடியாக உயர்த்த வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தின் அளவை மாதம் ரூ. 5 ஆயிரமாகவும், மற்ற பிரிவினருக்கான ஓய்வூதியத்தை மாதம் ரூ. 3 ஆயிரமாகவும் உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் தமிழ்நாட்டில் முதியோர், கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோரின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்து சமூக நீதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." என்று அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# பிரிஸ்பன் சர்வதேச டென்னிஸ் போட்டி

## வெற்றியுடன் தொடங்கினார் ரபேல் நடால்



**பிரிஸ்பன் : ஜன. 4,**

**பிரிஸ்பன் சர்வதேச டென்னிஸ் தொடரை ஸ்பெயினின் ரபேல் நடால் வெற்றியுடன் தொடங்கினார். ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பன் நகரில் பிரிஸ்பன் சர்வதேச டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.**

இதில் ஆடவருக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 22 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற ரபேல் நடால், தரவரிசையில் 3-வது இடத்தில் ஆஸ்திரியாவின் டொமினிக் தியமுடன் மோதினார். ஒரு மணி நேரம் 29 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நடால் 7-5, 6-1 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றார்.

37 வயதான ரபேல் நடால் கடைசியாக கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் தொடரின் 2-வது சுற்றில் இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகினார். இதன் பின்னர் எந்தவித போட்டிகளிலும் களமிறங்காத அவர், தற்போது பிரிஸ்பன் போட்டியில் களமிறங்கி புத்தாண்டை வெற்றியுடன் தொடங்கி உள்ளார்.

தரவரிசையில் 672-வது இடத்தில் உள்ள ரபேல் நடால், பிரிஸ்பன் தொடரில் வைல்டு கார்டு மூலம் பங்கேற்று விளையாடி வருகிறார். அவர், தனது 2-வது சுற்றில் 102-ம் நிலை வீரரான ஆஸ்திரேலியாவின் ஜேசன் குப்லருடன் மோதுகிறார்.

# "என் சம்மதம் இல்லாமல்தான்" முத்த வழக்கில் வீராங்கனையின் வாக்குமூலம்



**ஸ்பெயின் : ஜன. 4,**

**கடந்த 2023 ஆகஸ்ட் 20 அன்று, ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உலக கோப்பை பெண்கள் கால்பந்து போட்டியின் இறுதி போட்டி நடைபெற்றது. இங்கிலாந்து மற்றும் ஸ்பெயின் இப்போட்டியில் மோதின.**

பரபரப்பான ஆட்டத்தின் இறுதியில், ஸ்பெயின் 1-0 எனும் கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தியது. உலக கோப்பையை வென்ற மகிழ்ச்சியில் பரிசு பெறும் நிகழ்ச்சியில் ஸ்பெயின் வீராங்கனைகள் பங்கேற்ற போது, அந்நாட்டின் கால்பந்து விளையாட்டு சங்க தலைவர் லூயிஸ் ரூபியாலஸ் ஜென்னி ஹெர்மோசோ எனும் வீராங்கனையை கட்டியணைத்து முத்தமிட்டார்.

தகாத முறையில் நடந்து கொண்ட ரூபியாலஸின் நடவடிக்கை பெரிதும் விமர்சிக்கப்பட்டது. இதையடுத்து, "நான் நடந்து கொண்ட விதம் தவறுதான். அதை ஒப்பு கொள்கிறேன். ஆனால் அதிகபட்ச மகிழ்ச்சியில் எந்த உள்நோக்கமும் இல்லாமல் அவ்வாறு நடந்து கொண்டேன்" என ரூபியாலஸ் தெரிவித்தார். தொடர்ந்து, அவருக்கு எதிராக எழுந்த கண்டனங்களால், தனது பதவியை ராஜினாமா செய்தார்.

"எனக்கு ரூபியாலஸ் நடந்து கொண்ட விதம் பிடிக்கவில்லை" என ஹெர்மோசோ அப்போது கருத்து தெரிவித்தார். பெரும் சர்ச்சையை உண்டாக்கிய இந்நிகழ்வு குறித்து ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இதில் ஹெர்மோசோ, தனது கருத்துக்களை பதிவு செய்தார். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேல் அவரிடம் விசாரணை நடைபெற்றது. "என் சம்மதத்துடன் அந்த நிகழ்வு நடைபெறவில்லை. நான் எதிர்பாராத நேரத்தில் ரூபியாலஸ் அவ்வாறு நடந்து கொண்டார்" என ஹெர்மோசோ விசாரணையில் தெரிவித்தார். பரிசு வழங்கும் நிகழ்ச்சியின் போது அங்கிருந்த கண்காணிப்பு கேமிரா வீடியோக்களை நீதிமன்றம் ஆய்வு செய்து வருகிறது.

ஸ்பெயின் சட்டப்படி ஒருவரின் சம்மதமில்லாமல் அவருக்கு முத்தமிடுவது பாலியல் குற்றமாக கருதப்படும். எனவே, இப்போது நடைபெறும் விசாரணை முடிவில்தான் இவ்வழக்கில் ரூபியாலிஸ் பாலியல் குற்றம் புரிந்தவராக விசாரிக்கப்படுவாரா என தெரியவரும்.

# ஓடவும் முடியாது ஒழியவும் முடியாது – திரை விமர்சனம்



**சென்னை : ஜன. 4,**

**திரைப்படம் உருவாக்குவதற்காக தயாரிப்பாளரை தேடி அலையும் நண்பர்கள் சத்தியமூர்த்தி, விஜயகுமார், கோபி, சுதாகர். பள்ளி மாணவர்கள் இருவர்.**

தனது கணவனுக்கு தெரியாமல் கள்ளத்தொடர்பில் இருக்கும் பெண் மற்றும் கள்ளக்காதலன். ஐடி கம்பெனியில் பணியாற்றும் ஹரிஜா, யாஷிகா ஆனந்த். இவர்கள் அனைவரும் ஆலயம் என்ற தியேட்டரில் ஓடும் 'வாங்க அங்கிள் விளையாடலாம்' என்ற படத்தைப் பார்க்க செல்கின்றனர். அப்போது அங்குள்ள அமானுஷ்ய சக்தி அவர்களை பயமுறுத்துகிறது. இதனால், அவர்களால் அந்த தியேட்டரை விட்டு வெளியேற முடியாத நிலை. கடைசியில் அவர்கள் அமானுஷ்யத்திடம் இருந்து தப்பித்து தியேட்டரை விட்டு வெளியேறினார்களா? அமானுஷ்ய சக்தி யார்? அதற்கு ஏன் இந்த நிலை என்பது மீதி கதை.

யூடியூப் மூலம் பிரபலமானவர்கள் இணைந்து இப்படத்தை உருவாக்கியுள்ளனர். நடித்தவர்கள் அனைவரும் வசனங்களை ஒரே மாடுலேஷனில் ஒப்பிப்பதில் கவனம் செலுத்தி இருக்கிறார்கள். முகபாவனைகளில் கூடுதல் அக்கறை செலுத்தி இருக்க வேண்டும். என்றாலும், அவர்களின் காமெடி ஆங்காங்கே நன்கு ஒர்க்கவுட் ஆகியிருக்கிறது. 1993ல் தொடங்கி தியேட்டருக்குள் நுழையும் வரை திகில் எஃபெக்ட் கொடுத்துள்ளனர். வில்லத்தனம் நிறைந்த தயாரிப்பாளராக வரும் முனீஷ்காந்த், அவரது மனைவி மதுமிதா, இயக்குநர் சொன்ன மாதிரி நடித்துள்ளனர்.

ஹரிஜா, யாஷிகா ஆனந்த் ஆகியோருக்கு சற்று முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம். ஜார்ஜ் மரியான், ரித்விகா நடிப்பு வழக்கம்போல். படத்தில் காமெடி பேய்கள் இடம்பெற்றுள்ளதால், அதிக பயம் ஏற்படவில்லை. கவுஷிக் கிரிஷ் பின்னணி இசை படத்துக்கு பலம் சேர்த்துள்ளது. ஜோஸ்வா ஜே பெரஸ் ஒளிப்பதிவு, காட்சிகளுக்கு ஏற்ப நன்கு பயணித்துள்ளது. ரமேஷ் வெங்கட் இயக்கியுள்ளார். படத்தின் தலைப்பிலேயே நாசூக்காகச் சொல்லிவிட்டார் என்பதால், ஓடவும் முடியவில்லை ஒளியவும் முடியவில்லை.

# காதலை உறுதிப்படுத்திய சித்தார்த், அதிதி ராவ்



**சென்னை : ஜன. 4,**

**நடிகர் சித்தார்த்தும் அதிதி ராவ் ஹைதாரியும் 'மகாசமுத்திரம்' என்ற படத்தில் நடித்த போது காதலில் விழுந்ததாகக் கூறப்படுகிறது.**

இருவரும் ஒன்றாகவே சினிமா விழாக்கள், விருந்து நிகழ்ச்சிகள் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்று வருகின்றனர். இருவரும் ஜோடியாக சென்றாலும் காதலை வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

இந்நிலையில் சித்தார்த், தனது சமூக வலைதளப் பக்கத்தில் அதிதி ராவுடன் நெருக்கமாக இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டு புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். அதே புகைப்படத்தை அதிதிராவும் வெளியிட்டுள்ளார். இதன்மூலம் இருவரும் தங்கள் காதலை உறுதிப்படுத்தி இருப்பதாக சமூக வலைதளங்களில் கூறி வருகின்றனர்.

# தேசிய கிரிக்கெட் அணிக்கு தேர்வான நரிப்பள்ளி அரசுப் பள்ளி மாணவிகளுக்கு பாராட்டு



**அரூர் : ஜன. 4,**

**திருப்பத்தூரில் கடந்த மாதம் இந்திய தேசிய பள்ளிகள் விளையாட்டுக் குழுமம் சார்பில் தேசிய அளவில் பெண்கள் கிரிக்கெட் போட்டிக்கான மாணவிகளை தேர்ந்தெடுக்கும் போட்டி நடைபெற்றது.**

இதில் தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்துக்கு உட்பட்ட நரிப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 பயிலும் மாணவிகள் எஸ்.ஜமுனா, ஜி.பேபி ஷாலினி, வி.தமிழரசி, வி.சுவாதி ஆகியோர் பங்கேற்றனர். இதில், சிறப்பாக விளையாடிய 4 மாணவிகளும் தேசிய பெண்கள் அணியில் விளையாட நேரடியாக தகுதி பெற்றனர். தேர்வு செய்யப்பட்ட மாணவிகளுக்கான போட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற உள்ளது.

அப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவிகளுக்கான வழியனுப்பு விழா நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பள்ளியின் தலைமை ஆசிரியர் சகுந்தலா தலைமையில் நடந்தது. இதில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர், பொதுமக்கள் பங்கேற்று மாணவிகளை வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். முன்னதாக, போட்டியில் பங்கேற்கும் மாணவிகளுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள், அழகு அரூர் காப்போம் அமைப்பு சார்பில் ரூ.40 ஆயிரம் மதிப்பில் வழங்கப்பட்டது.

# "பிரிஜ் பூஷன் ஆட்கள் மிரட்டுகின்றனர் : சஞ்சய் சிங் இல்லாத கூட்டமைப்பை ஏற்கிறோம்" – சாக்ஷி மாலிக்



**புதுடெல்லி : ஜன. 4,**

**"பாஜக எம்.பி.யும், மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் குண்டர்கள் ஆக்டிவாக இருக்கின்றனர். எனது தாய்க்கு தொலைபேசி அழைப்புகள் மூலம் அச்சுறுத்தல்கள் வருகிறது. பிரிஜ் பூஷன் சிங்கின் நெருங்கிய ஆதரவாளரான சஞ்சய் சிங் இல்லாத இந்திய மல்யுத்த கூட்டமைப்பை நாங்கள் ஏற்கிறோம். மற்ற உறுப்பினர்கள் இருப்பதில் எங்களுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை" என சாக்ஷி மாலிக் தெரிவித்துள்ளார்.**

டெல்லி ஜந்தர் மந்தர் மைதானத்தில் ஒரு வருடத்துக்கு முன்பாக இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் அப்போதைய தலைவர் பிரிஜ் பூஷண் சிங் மீது பாலியல் புகார் கூறி, அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி முன்னணி வீரர்களான சாக்ஷி மாலிக், வினேஷ் போகத் மற்றும் பஜ்ரங் புனியா ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக பிரிஜ் பூஷன் சிங் ஆதரவாளர் சஞ்சய் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாக்ஷி மாலிக் உள்ளிட்ட வீரர்கள் மல்யுத்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தனர்.

இதையடுத்து, இந்திய மல்யுத்த கூட்டமைப்பு இரண்டு முறை இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதே வேளையில், இந்தக் கூட்டமைப்பை தற்காலிகக் குழு நிர்வகித்து வருகிறது. இந்நிலையில், நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சாக்ஷி மாலிக், "பாஜக எம்.பி.யும், மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் குண்டர்கள் ஆக்டிவாக இருக்கின்றனர். எனது தாய்க்கு தொலைபேசி அழைப்புகள் மூலம் அச்சுறுத்தல்கள் வருகின்றன. எனது குடும்பத்தில் உள்ள ஒருவர் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என மிரட்டுகிறார்கள்.

பிரிஜ் பூஷன் சிங்கின் ஆதரவாளரான சஞ்சய் சிங் இல்லாத இந்திய மல்யுத்த கூட்டமைப்பை நாங்கள் ஏற்கிறோம். மற்ற உறுப்பினர்கள் இருப்பதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. சமூக ஊடகங்களில் உள்ளவர்கள் எங்களை துஷ்பிரயோகம் செய்கிறார்கள், ஆனால் அவர்கள் வீட்டிலும் சகோதரிகள் மற்றும் மகள்கள் இருப்பதை மறந்துவிடக் கூடாது.

மல்யுத்த கூட்டமைப்பின் செயல்பாடுகளில் சஞ்சய் சிங் தலையிடாதவாறு பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் உறுதி செய்ய வேண்டும். கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங், எனது குடும்பத்தை குறிவைக்கிறார். எங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்" என்று சாக்ஷி மாலிக் தெரிவித்தார்.

தனக்கு எதிரான இளம் வீரர்களின் போராட்டம் குறித்து தொடர்ந்து பேசிய சாக்ஷி, "மல்யுத்த கூட்டமைப்பு தேர்தலுக்குப் பிறகு பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் அதிகார துஷ்பிரயோகத்தை அனைவரும் பார்த்தனர். இளம் மல்யுத்த வீராங்கனைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். எங்களால் எந்த இளம் மல்யுத்த வீரரும் பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. நான் 18-20 வருடங்களாக மல்யுத்த விளையாட்டு போட்டிகளில் இருக்கிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்பு என்ன நடந்தது என்பது எனக்கு மட்டுமே தெரியும்" என்றார்.

தற்போது இந்திய மல்யுத்த கள நிலவரத்தில் புதிய திருப்பமாக, 'முன்னணி வீரர்கள் பஜ்ரங் புனியா, சாக்ஷி மாலிக், வினேஷ் போகத் ஆகியோர் எங்களின் வாழ்க்கையில் ஓராண்டை வீணாக்கி விட்டனர்' என்று கூறி, அவர்களுக்கு எதிராக 100-க்கும் மேற்பட்ட இளம் வீரர்கள் டெல்லி ஜந்தர் மந்தரில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# சத்தமில்லாமல் சாதித்த அட்லி பாராட்டித் தள்ளிய சிவகார்த்திகேயன்



**சென்னை : ஜன. 4,**

**அட்லி செய்துள்ள சாதனை மிகப்பெரியது என நடிகர் சிவகார்த்திகேயன் பாராட்டியுள்ளார்.**

ஷாருக்கான், தீபிகா படுகோனே, நயன்தாரா உள்ளிட்டப் பலரது நடிப்பில் கடந்த வருடம் 'ஜவான்' படம் வெளியானது. இந்தப் படம் மூலம் அட்லி பாலிவுட்டில் இயக்குநராக அறிமுகமானார். அறிமுகமான முதல் படத்திலேயே ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்தது. இந்த நிலையில், நடிகர் சிவகார்த்திகேயன் தனது நண்பரும் இயக்குநருமான அட்லியை பாராட்டித் தள்ளியுள்ளார். இந்த பொங்கல் விடுமுறைக்கு சிவகார்த்திகேயனின் 'அயலான்' திரைப்படம் வெளியாக இருக்கிறது. இதனை ஒட்டி பல ஊடகங்களுக்கும் அவர் பேட்டிக் கொடுத்து வருகிறார்.

அதில் அட்லி குறித்து அவர் பேசியிருப்பதாவது, "ஜவான் படத்தின் டிரெய்லர் பார்த்ததும் அட்லிக்கு நான் சொன்னது ஒரு விஷயம்தான். 'தம்பி இனிமே நீ இந்தபக்கம் வர முடியாது. உன்னை அங்க தூக்கி கொண்டாடிருவாங்க. இந்தப்படம் அவங்களுக்கு பயங்கர புதுசு. பிரம்மாண்ட வெற்றிபெறும்! நீ வெயிட் பண்ணி பாரு'ன்னு சொன்னேன். நான் சொன்னது போலவே அது நடந்துருக்கு. ஒருத்தர் தமிழ்ல இருந்துபோய் ஷாருக்கானை வச்சு, 1200 கோடி ரூபாய் வசூல் பண்றது சாதாரண விஷயம் கிடையாது" என அட்லியை பாராட்டித் தள்ளியுள்ளார்.

வரலாறு சினிமா

# கலைஞர் 100 விழா : ரஜினி, கமலுக்கு புதிய அழைப்பிதழ்



**சென்னை : ஜன. 4,**

**தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் நடைபெற உள்ள 'கலைஞர் 100' விழாவுக்கான புதிய அழைப்பிதழ் நடிகர்கள் ரஜினி, கமல் இருவருக்கும் நேரில் வழங்கப்பட்டது.**

மறைந்த திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான கருணாநிதி நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் திமுக சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் 'கலைஞர் 100 விழா' பிரம்மாண்டமாக நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது.

அதன்படி, தமிழ் சினிமா வளர்ச்சியில் கருணாநிதியின் பங்களிப்பை போற்றும் விதமாக தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் 'கலைஞர் 100' விழா பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது. இதில் சிறப்பு விருந்தினர்களாக ரஜினி, கமல் ஆகியோர் கலந்துகொள்வார்கள் என்றும் கூறப்பட்டது.

இந்த விழாவில் பங்கேற்க நடிகர் ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் இருவரையும் கடந்த நவம்பர் மாதம் நேரில் சந்தித்து அவரது தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள் அவருக்கு 'கலைஞர் 100' விழாவுக்கான அழைப்பிதழ் வழங்கினர்.

இதனையடுத்து சென்னையில் கடந்த டிசம்பரில் பெய்த கனமழையால் கடும் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் 'கலைஞர் 100' விழா ஜனவரி 6ஆம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த விழாவுக்கான புதிய அழைப்பிதழை மீண்டும் ரஜினி மற்றும் கமல் இருவருக்கும் நேரில் வழங்கப்பட்டது. இந்த சந்திப்பில், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். இருவரும் இந்த விழாவில் கலந்து கொள்வதாக உறுதி அளித்துள்ளதாக கூறப்படுகிறது.

# ரொமான்டிக் காமெடி கதையில் மஹத், ஐஸ்வர்யா தத்தா



**சென்னை : ஜன. 4,**

**நடிகர் மஹத் ராகேவந்திரா, ஐஸ்வர்யா தத்தா முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ள படத்துக்கு 'கெட்டவன்னு பேர் எடுத்த நல்லவன்டா' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.**

ரொமான்டிக் காமெடி படமான இதை வர்ணாலயா சினி கிரியேஷன்ஸ் சார்பில் ஃபேவின்ஸ் பால் தயாரிக்கிறார்.

பிரபுராம். செ இயக்குகிறார். சாக்ஷி அகர்வால், யோபாபு, ராஜேந்திரன், நிழல்கள் ரவி, ஆதவ் சசி, ஆதித்யா கதிர் நடித்துள்ளனர். பாடல்களுக்குத் தரண்குமாரும் பின்னணிக்கு கார்த்திக் கிருஷ்ணனும் இசையமைத்துள்ளனர்.

"மஹத் வட சென்னையைச் சேர்ந்தவராக நடித்துள்ளார். ரொமான்டிக் காமெடி ஜானரில் உருவாகி இருந்தாலும் சில உணர்ச்சிகரமான தருணங்களும் படத்தில் இருக்கின்றன. பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணாக ஐஸ்வர்யா தத்தா நடித்துள்ளார்" என்றது படக்குழு. சமீபத்தில் இந்தப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

# 'லோகேஷ் கனகராஜுக்கு உளவியல் பரிசோதனை செய்ய வேண்டும்'

## உயர் நீதிமன்றத்தில் வழக்கு



**மதுரை : ஜன. 4,**

**லியோ படத்தில் வன்முறை காட்சிகள் இருந்ததாக கூறி இயக்குநர் லோகேஷ் கனகராஜுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.**

வன்முறை காட்சிகள் நிறைந்த லியோ படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என உயர்நீதிமன்ற கிளையில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இயக்குநர் லோகேஷ் கனகராஜை முறையாக உளவியல் பரிசோதனை செய்ய வேண்டும் என மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான விஜய் நடிப்பில், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவான திரைப்படம் 'லியோ'. இந்த படம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் தேதி வெளியானது. இந்நிலையில் வன்முறை காட்சிகள் நிறைந்த லியோ படத்திற்கு தடை விதிக்க வேண்டும் என தற்போது உயர்நீதிமன்ற கிளையில் ராஜமுருகன் என்பவர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் தாக்கல் செய்த மனுவில்; 'லியோ' திரைப்படம் முழுவதும் வன்முறை சம்பவங்களாகவே உள்ளன. வெடி மருந்து தயாரித்தல், பயங்கர ஆயுதங்களை பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வன்முறை தொடர்பான காட்சிகள் படத்தில் உள்ளது. இந்த படத்தை பார்க்கும் 18 வயதிற்குகீழ் உள்ளவர்களின் மனநிலை மிகவும் பாதிப்பிற்குள்ளாகும்.

எனவே 'லியோ' திரைப்படத்தை அனைத்து சமூக ஊடகங்களிலிருந்து வெளியிடுவதை தடை செய்ய வேண்டும். தொடர்ந்து வன்முறை சம்பவங்களை கொண்டு திரைப்படம் இயக்கக்கூடிய இயக்குனர் லோகேஷ் கனகராஜ் மீது இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் அவரை உளவியல் பரிசோதனை செய்ய வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

இந்த மனு நீதிபதிகள் கிருஷ்ணகுமார், விஜகுமார் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகவில்லை. எனவே இந்த வழக்கு விசாரணையை ஒத்திவைப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

வரலாறு உலகம்

# “யாருடனும் பேச விடாமல் 54 நாட்கள் இருட்டு அறையில் அடைத்து வைத்தனர்”

## ஹமாஸ் பிடியில் இருந்து மீண்ட இஸ்ரேல் பெண் தகவல்



**ஜெருசலேம் : ஜன. 4,**

**யாருடனும் பேச விடாமல் 54 நாட்கள் என்னை இருட்டு அறையில் அடைத்து வைத்திருந்தனர் என்று விடுவிக்கப்பட்ட இஸ்ரேல்-பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த டாட்டூன் பெண் கலைஞர் மியா ஸ்கெம் தெரிவித்தார்.**

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் காசாவில் இயங்கி வரும் ஹமாஸ் படை இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து அந்த நாட்டை சேர்ந்தவர்கள், அங்கிருந்த வெளிநாட்டவர்கள் என சுமார் 240 பேரை பிணைக் கைதிகளாக பிடித்து சென்றனர். 3 மாதங்களாக நடந்து வரும் இருநாட்டு போரில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள், பெண்கள், முதியோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், போர் விதிகளை மீறி இஸ்ரேல் பாஸ்பரஸ் குண்டுகளை வைத்து காசாவின் பல்வேறு பகுதிகளைத் தாக்கியது. காசாவில் உள்ள அகதிகள் முகாம்கள், மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்கள் என எந்த பகுதியையும் விட்டுவைக்காமல் அடைக்கலம் புகுந்தவர்கள், காயமடைந்தவர்கள், நோயாளிகளையும் இஸ்ரேல் தாக்கியது, சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேல் நடத்தி வரும் தொடர்தாக்குதலால் காசா பகுதியே சின்னாபின்னமாகி உள்ளது.

இந்நிலையில் ஹமாஸ் படையினர் பிடித்துச் சென்ற 240 பேரில் இஸ்ரேல்-பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த 21 வயதான பெண் டாட்டூ கலைஞர் மியா ஸ்கெம்மும் ஒருவர். இவர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: நான் 54 நாட்களாக இருட்டு அறையில் அடைக்கப்பட்டு இருந்தேன். என்னைத் தொடர்ந்து கண்காணித்தனர். அங்கு பேசுவதற்கு அனுமதி இல்லை. யாரையும் பார்க்கவும் முடியாது. எதையும் கேட்கவும் முடியாது. என்னை அடைத்து வைத்திருந்த நபரின் அறையில்தான் நான் இருந்தேன். அந்த அறைக்கு அருகில் உள்ள அறையில் அவரது மனைவி, குழந்தைகள் இருந்தனர். அதனால்தான் அந்த நபர், என்னை பாலியல் வன்கொடுமை செய்யவில்லை.

எந்த நேரத்திலும் நான் கொல்லப்படுவேன் என்ற மரண பயம் எனக்கு இருந்தது. என்னை தொடர்ந்து கண்காணித்து வந்ததால், அந்த நபரின் கண்களாலேயே நான் பாலியல் வன்கொடுமை செய்யப்படுவேன் என்ற படுமோசமான உணர்வு எனக்கு இருந்தது. கண்ணில் எப்போதும் எனக்கு சாவு பயம் இருந்தது. 54 நாட்களும் அங்கு பயத்துடனேயே அங்கு இருந்தேன்.

ஒரு கட்டத்தில் என்னை சிறைபிடித்த நபர், தன்னுடைய மனைவியை காதலிக்கவில்லை என்று என்னிடம் சொன்னார். ஒருவழியாக நான் விடுவிக்கப்பட்டேன். வெளியே தப்பி வந்தது கனவு போல இருக்கிறது என்று அவர் கூறினார்.

# ஆப்கானிஸ்தானில் அரை மணி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் : மக்கள் அதிர்ச்சி



**காபூல் : ஜன. 4,**

**ஆப்கானிஸ்தானில் அரை மணி நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். இவை ரிக்டர் அளவில் 4.4 மற்றும் 4.8 எனப் பதிவாகியுள்ளது.**

முதல் நிலநடுக்கமானது, பைசாபாத் நகரத்தில் இருந்து 126 கி.மீ. தொலைவில் 80 கி.மீ. ஆழத்தில், 4.4 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது. இதைத் தொடர்ந்து, பைசாபாத் நகரத்தில் இருந்து 100 கி.மீ தொலைவில் 140 கி.மீ ஆழத்தில், 4.8 ரிக்டர் அளவில் இரண்டாவது நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் வீடுகளும் அதிர்ந்ததால் மக்கள் மிரண்டுபோய் வீட்டைவிட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். சேதமடைந்த பொருட்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

கடந்த ஆண்டு அக். 07-ல் ஆப்கானிஸ்தானின் மேற்கு பகுதியில் உள்ள ஹெராத் மாகாணத்தில் காலை 11 மணி முதல் 12 மணி வரை அடுத்தடுத்து 4 முறை பூகம்பங்கள் ஏற்பட்டன. இவை ரிக்டர் அலகில் 5.5, 5.9, 6.2, 6.3 என்று பதிவாகின. தொடர்ந்து பலமுறை நிலஅதிர்வுகளும் ஏற்பட்டன. இந்த பூகம்பத்தால் ஹெராத் பகுதியில் 20 கிராமங்கள் முழுமையாக நாசமாகின. 10,000-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர், மேலும் 4000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் புத்தாண்டு தினமான (ஜன.1) ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

# ஒரே ஆண்டில் 170 பேருக்கு மரணதண்டனை வழங்கிய சவுதி



**சவுதி அரேபியா : ஜன. 4,**

**சவுதி அரேபியாவில் கடந்த 2022-ம் ஆண்டைவிட 2023-ம் ஆண்டில் அதிகபட்சமாக 170 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்ற புள்ளிவிவரங்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

குற்றங்களுக்கு அதிகபட்சமாக மரணதண்டனை விதிக்கும் நாடுகளில் சவுதி அரேபியாவும் ஒன்றாகும். ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு மன்னர் சல்மான் மற்றும் அவரது மகன் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் ஆட்சிக்கு வந்ததில் இருந்து மரணதண்டனை விதிப்பது அதிகரித்துள்ளது.

சவுதி அரேபியாவில் கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் 38 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிகாரிகளின் கூற்றுப்படி, 2022-ம் ஆண்டை விட 2023-ல் மரணதண்டனை வழக்குகள் அதிகரித்துள்ளன. 2022ல் மொத்தம் 147 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு முன்பு 2019-ம் ஆண்டு சவுதியில் 187 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

புத்தாண்டு விழாவான டிசம்பர் 31, ஞாயிற்றுக்கிழமையன்று, நான்கு பேருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. நான்கு பேரும் கொலைக் குற்றவாளிகள் என்று உள்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இதில், இரண்டு மரண தண்டனைகள் வடமேற்கு நகரமான தபூக்கிலும், ஒன்று தலைநகர் ரியாத்திலும், ஒன்று தென்மேற்கில் உள்ள ஜசானிலும் நிறைவேற்றப்பட்டது.

2023-ல் மரணதண்டனை விதிக்கப்பட்ட 170 பேரில் 33 பேர் பயங்கரவாதக் குற்றச்சாட்டை எதிர்கொண்டனர். இருவர் சவுதி ராணுவ வீரர்கள். அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு துப்பாக்கிச்சூடு அல்லது தலை துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

எண்ணிக்கை அடிப்படையில், மரண தண்டனை வழக்குகள் 2023-ம் ஆண்டு அதிகரித்துள்ளது. மரணதண்டனை தொடர்பாக சவுதி அரேபியாவில் உள்ள அரசாங்கத்தையும், நீதிமன்றத்தையும் மனித உரிமை அமைப்புகள் கடுமையாக விமர்சிக்கின்றன. இதை இளவரசர் முகமது பின் சல்மான் மாற்ற விரும்புகிறார், ஆனாலும் மரணதண்டனை வழக்குகள் 2023-ல் மேலும் அதிகரித்துள்ளன.

# ஹமாஸின் முக்கிய தலைவர் கொலை

## மீண்டும் உச்சம் தொடும் போர் பதற்றம்



**பெய்ரூட் : ஜன. 4,**

**லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நிகழ்ந்த டிரோன் தாக்குதலில், ஹமாஸ் குழுவின் துணை தலைவர் சலே அல் அரூரி கொல்லப்பட்டதால் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.**

ஹமாஸ் போராட்டக் குழுவின் நிறுவனர்களில் ஒருவரான சலே அல் அரூரி, மேற்குக் கரையில் உள்ள குழுவிற்கு தலைமை தாங்கி வந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பெய்ரூட்டில் இஸ்ரேலிய டிரோன் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில், ஹமாஸ் குழுவின் துணை தலைவர் சலே அல் அரூரி மற்றும் மூன்று பேர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் உறுதிப்படுத்தியுள்ளனர். இதுதொடர்பாக, இஸ்ரேலிய அதிகாரிகள் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்ட நிலையில், இந்தத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருந்தால், அது மத்திய கிழக்கு மோதலை பெரிதுப்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், சலே அல் அரூரி மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, பாலஸ்தீனத்தின் ரமல்லாவில் ஹமாஸ் அமைப்பினர் மற்றும் ஆதரவாளர்கள் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அரூரி கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கக் கோரி கோஷமிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பாலஸ்தீனத்தின் அதிபர் மஹ்மோத் அப்பாஸ் உடன் நல்லுறவு கொண்டிருந்த அரூரி, போட்டி குழுக்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்க முயன்று வந்தார். இதனிடையே, லெபனானில் உள்ள பாலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் குறிவைத்தால் பதிலடி கொடுக்கப்படும் ஹிஸ்புல்லா தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லா உறுதியளித்துள்ளதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

# போருக்கு மத்தியில் மழை – குளிரால் தவிக்கும் காசா மக்கள்



**பால்ஸ்தீனம் : ஜன. 4,**

**இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பு இடையேயான போரால் காசா மக்கள் கடும் துயரத்தை சந்தித்து வருகிறார்கள்.**

10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து தெற்கு காசாவில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காசா முழுவதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால் உயிரை கையில் பிடித்தப்படி இருக்கிறார்கள். மேலும் உணவு, குடிநீர், மருந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு உள்ளதால் மக்கள் தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் காசாவில் ரபா நகரில் மழை பெய்து வருகிறது. மேலும் கடும் குளிரும் நிலவி வருகிறது. அதேபோல் மற்ற பகுதிகளிலும் மழை பெய்கிறது. இதனால் கூடாரங்களில் தங்கியுள்ள மக்கள் அவதி அடைந்துள்ளனர். ஏற்கனவே உணவு பற்றாக்குறையால் தவிக்கும் காசா மக்களுக்கு தற்போதைய மழை துயரத்தை அதிகப்படுத்தி உள்ளது.

# மது மற்றும் இரவு விடுதிகளுக்கு வரி குறைப்பு

## சுற்றுலாப் பயணிகளை இழுக்க தாய்லாந்து தடாலடி



**தாய்லாந்து : ஜன. 4,**

**சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தும் நோக்கில், மது மற்றும் இரவு விடுதிகளுக்கான வரிகளை அடித்து நொறுக்கியுள்ளது தாய்லாந்து தேசம்.**

தாய்லாந்து தேசத்தின் வருமான ஆதாயங்களில் பிரதானமானது சுற்றுலா. இயற்கை அழகு கொஞ்சும் தாய்லாந்து தேசத்தில் விடுமுறையை கழிக்க உலகெங்கும் இருந்து சுற்றுலாப் பயணிகள் குவிவது வழக்கம். சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் நோக்கில் தங்குமிடங்கள், பொழுதுபோக்கும் இடங்கள், கேளிக்கை மையங்கள் உள்ளிட்டவற்றை ஏகமாய் தாய்லாந்து உருவாக்கி வைத்துள்ளது. அதிலும் தாய்லாந்தின் வனப்புமிக்க பெண்களை மையமாகக் கொண்ட பாலியல் தொழிலும் உலகளவில் பிரசித்தி பெற்றது.

ஆனால் இவையனைத்தையும் கொரோனா காலம் உருக்குலைத்துப் போட்டது. பெருந்தொற்றுப் பரவலுக்கு அஞ்சி உலகம் வீடடைந்து கொண்டதில், தாய்லாந்து தேசத்தில் சுற்றுலாவை நம்பியிருந்த தொழில்கள் அனைத்தும் நொடித்துப் போயின. கொரோனா தாக்கம் குறைந்து, உலகம் இயல்புக்கு திரும்ப ஆரம்பித்த பிறகும், விட்ட இடத்தில் வருமானத்தை பிடிக்க முடியாது தாய்லாந்து தவித்து வந்தது. எனவே அரசு தரப்பில் அதிரடி அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடிவானது.

அதன்படி 2023-ல் தொடங்கப்பட்ட பல்வேறு கவர்ச்சிகரமான திட்டங்கள் வாயிலாக சுற்றுலாப் பயணிகள் வருகை கணிசமாக அறிவித்தது. இதற்காக விருந்தோம்பலில் தொடங்கி, பொழுதுபோக்கும் மற்றும் இரவு கேளிக்கை மையங்களின் திறப்பு நேரத்தை வெகுவாக அதிகரித்தது. ஆண்டின் முடிவில் தாய்லாந்துக்கு வருகை தந்தோர் எண்ணிக்கை 28 மில்லியனைக் கடந்தது உறுதியானதும் தாய்லாந்து உற்சாகமானது. இதன் தொடர்ச்சியாக பிறந்திருக்கும் 2024-ம் ஆண்டில், சுற்றுலாப் பயணிகளை கூடுதலாக ஈர்க்க புதிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

இதன்படி சுற்றுலாவாசிகளை கிட்டத்தட்ட மதுவால் குளிப்பாட்ட முடிவானது. உள்நாட்டில் தயாராகும் தாய்லாந்து ஒயின் உள்ளிட்ட உள்ளூர் ரகங்கள் மீதான வரிவிதிப்பை 10% என்பதிலிருந்து, 5% என்பதாக குறைத்து அறிவித்தது. ஆல்கஹால் விகிதம் அதிகமான இதர மது ரகங்கள் மீதான வரி விதிப்பை 10% என்பதிலிருந்து பூஜ்ஜியமாக்கி உள்ளது. இவற்றுக்கு அப்பால் தாய்லாந்தின் தனி ஈர்ப்பான இரவு விடுதிகள் மீதான வரி விதிப்பையும் குறைத்து அறிவித்துள்ளது. மது, மாது என வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தூண்டில் போடும் தாய்லாந்து இதன் மூலமாக கூடுதல் வருமானத்தை குவிக்க இருக்கிறது.

# ஜப்பானிய கடலோர காவல்படை விமானத்தில் இருந்த 5 விமானிகள் தீயில் கருகி பலி



**டோக்கியோ : ஜன. 4,**

**டோக்கியோவில் பயணிகள் விமானம் தரையிறங்கியபோது, கடலோர காவல் படை விமானம் மீது மோதியது. இரு விமானங்களிலும் தீப்பிடித்த நிலையில் கடலோர காவல் படை விமானத்தில் இருந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்.**

ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் ஹனெடா விமான நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பயணிகள் விமானம் ‘ஜேஏஎல்-516’ தரையிறங்கியது. அப்போது, ஓடுபாதையில், ஜப்பானிய கடலோர காவல்படை விமானம் மீது பயணிகள் விமானம் மோதியது. இதில் இரு விமானங்களிலும் தீப்பிடித்தது. இந்த சம்பவத்தில் ஐந்து பேர் உயிரிழந்துள்ள தகவல் தற்போது தெரியவந்துள்ளது.

இவர்கள் அனைவரும் கடலோர காவல்படை விமானத்தில் இருந்த விமான ஓட்டிகள் என்பது தெரியவந்துள்ளது. கடந்த திங்கள்கிழமை, ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக கடலோர காவல்படை விமானம் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது.

அப்போது ஜப்பானின் ஹொக்கைடோவிலிருந்து டோக்கியோவுக்கு 367 பயணிகள், 12 விமான ஊழியர்களுடன் வந்த ஜப்பான் ஏர்லைன்ஸ் ‘ஜேஏஎல் 516’ விமானம், ஓடுதளத்தில் நின்று கொண்டிருந்த, சிறிய ரக கடலோர காவல்படை விமானத்தின் மீது மோதியது. இதில் இரு விமானங்களுமே தீப்பிடித்து எரிந்தன. இந்த வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் குறித்து ஜப்பானிய போக்குவரத்து அமைச்சர் டெட்சுவோ சைட்டோ கூறுகையில், “ ‘ஜேஏஎல்-516’ பயணிகள் விமானத்தில் இருந்த 379 பயணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். ஆனால், கடலோர காவல்படை விமானத்தில் ஏற்பட்ட தீயில் கருகி, 5 விமான ஓட்டிகள் உயிரிழந்துவிட்டனர்.

விமானத்தின் கேப்டன் பலத்த தீக்காயத்துடன் உயிர்தப்பினார். இந்தவிபத்து எவ்வாறு நடந்தது என்பதை கூறும் நிலையில் நாங்கள் தற்போது இல்லை” என்றார். ஜப்பானில் நிலநடுக்கத்தால் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள நிலையில், தற்போது, விமான விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் அந்நாட்டினர் மட்டுமின்றி அனைத்து நாட்டினரையுமே அதிர்ச்சியடைய செய்துள்ளது.

# ஜெய்சங்கருடன் உக்ரைன் வெளியுறவு மந்திரி டெலிபோனில் பேச்சு

**கீவ் : ஜன. 4,**

**உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ள ரஷியா, சமீபகாலமாக தீவிரமாக வான் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.**

பெரும்பாலான ஏவுகணைகள் உக்ரைன் பகுதியை தாக்குவதால் அதிக அளவில் சேதம் ஏற்படுகிறது. மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் படைகள் ரஷியாவுக்கு பதிலடி கொடுத்து வருகின்றன.

இந்நிலையில், உக்ரைன் வெளியுறவு மந்திரி டிமிட்ரோ குலேபா இந்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருடன் தொலைபேசியில் உரையாடினார். இதுதொடர்பாக, உக்ரைன் வெளியுறவு மந்திரி டிமிட்ரோ குலேபா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பிரச்சினைகள் குறித்து இந்திய வெளியுறவு மந்திரி டாக்டர் எஸ்.



ஜெய்சங்கருடன் தொலைபேசியில் உரையாடினேன். இந்தியா-உக்ரைன் இடையிலான அரசு ஆணையத்தின் முதல் கூட்டத்தை எதிர்காலத்தில் நடத்த நாங்கள் ஒப்புக்கொண்டோம் என பதிவிட்டுள்ளார்.

# வேலி இல்லா மெடாவெர்ஸ் புது ரக பாலியல் தாக்குதல்



**பிரிட்டன் : ஜன. 4,**

**சமீப சில வருடங்களாக இணையதளத்தில், “விஆர்” எனப்படும் மெய்நிகர் உண்மை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயனர்கள் விளையாடும் பல விளையாட்டுக்கள் பிரபலமடைந்துள்ளன.**

வீட்டிற்கு வெளியே செல்லாமல் குழந்தைகளால் விளையாட முடியும் என்பதால் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இதற்கு தேவையான ஹெட்செட் போன்ற உபகரணங்களை வாங்கி தந்து ஊக்குவிக்கின்றனர். மெடாவெர்ஸ் எனப்படும் வளர்ந்து வரும் இத்தொழில்நுட்பத்தில், தொலைதூரத்தில் உள்ள ஒருவருடனோ அல்லது பலருடனோ, அல்லது ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வழியாகவோ, குழந்தைகளால் விளையாட முடிகிறது.

இந்நிலையில், இங்கிலாந்தில் 16 வயது சிறுமி ஒருவர் இதற்கான உபகரணங்களுடன் தனது வீட்டில் இருந்தபடியே “இம்மர்சிவ் கேம்ஸ்” எனப்படும் “மூழ்கடிக்கும் விளையாட்டு” வகைகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விளையாடினார். மெடா நிறுவனத்தின் (முன்னர் ஃபேஸ்புக்) “ஹொரைசான் வேர்ல்ட்ஸ்” எனப்படும் அந்த மெய்நிகர் விளையாட்டில் “அவதார்” எனப்படும் அவரை போன்றே தோற்றமுடைய மெய்நிகர் வடிவத்துடன், பல இடங்களில் இருந்து பலர் தங்கள் அவதார் உருவங்களுடன் விளையாடி வந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக பிற அவதார்கள் (அதனை இயக்குபவர்களால்) அச்சிறுமியின் அவதார் மீது பாலியல் தாக்குதல் நடத்தியது. சிறுமி மீது நேரடியான பாலியல் தாக்குதல் நடக்கவில்லை என்றாலும் மெய்நிகரில் நடைபெற்ற “கூட்டு பாலியல் தாக்குதல்” அச்சிறுமிக்கு உணர்வுபூர்வமாகவும், உளவியல் ரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, அச்சிறுமியின் குடும்பத்தினர், இங்கிலாந்து காவல்துறையிடம் இது குறித்து புகாரளித்தனர். காவல்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. இவ்விளையாட்டு தளம் குறித்து முன்னரே இது போன்ற புகார்கள் சில முறை எழுப்பபட்டும், சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்து முழு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள இங்கிலாந்து உள்துறை செயலாளர் ஜேம்ஸ் க்ளெவர்லி, “இது போன்ற தாக்குதல்களை குறைத்து மதிப்பிடாமல் தீவிரமாக நாம் பார்க்க வேண்டியது அவசியம்” என தெரிவித்துள்ளார்.

“வேலி இல்லாத மெய்நிகர் விளையாட்டுகளில் தாக்குதலை நடத்த இரை தேடும் மிருகங்கள் போல் பல விஷமிகள் அதிகம் வர வாய்ப்புள்ளதால், இவற்றை தடுக்கும் விதமாக சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்” என இங்கிலாந்து காவல் துறை தலைவர் “இயான் க்ரிஷ்லி” தெரிவித்துள்ளார்.

வெளியில் விளையாட சென்றால் மட்டும்தான் ஆபத்து என எண்ணி வீட்டிற்கு உள்ளே குழந்தைகள், நவீன தொழில்நுட்பங்களை பயனபடுத்தும் போது அவர்களின் விளையாட்டுக்களை பெற்றோர் கண்காணிக்காமல் இருப்பது தவறு என இணையதள வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர்.

# அமமுகவுடன் இணைந்து மக்களைவைத் தேர்தலை சந்திப்போம் : ஓ.பன்னீர்செல்வம்





# அசாமில் பேருந்தும் லாரியும் மோதி விபத்து : 14 பேர் உயிரிழப்பு

# சமூக ஊடகங்களில் யாரையும் தரக்குறைவாக விமர்சிக்காதீர் : இபிஎஸ் அறிவுரை




சென்னை / புதுக்கோட்டை | 04.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்



பதஞ்சலி சாஸ்திரி , இந்தியாவின் 2வது தலைமை நீதிபதி (பி.1889) (இ.1963)



ஜே. சி. குமரப்பா , தமிழகப் பொருளியலாளர் (பி.1892) (இ.1960)



எஸ். எஸ். வாசன் , தமிழகத் திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (பி.1904) (இ.1969)



ஞாநி சங்கரன் , தமிழக எழுத்தாளர், நாடகக் கலைஞர், அரசியல் விமர்சகர் (பி.1954) (இ.2018)

## இன்றைய நினைவு நாள்



சேசாத்திரி சுவாமிகள் , தமிழக சித்தர் (பி.1870) (இ.1929)



அண்ணல் தங்கோ , தனித்தமிழ் அறிஞர், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1904) (இ.1974)



ஜி. டி. நாயுடு , இந்திய அறிவியலாளர் (பி.1893) (இ.1974)



திருக்குறள் வீ. முனிசாமி , தமிழகத் தமிழறிஞர், அரசியல்வாதி (பி.1913) (இ.1994)